

உ
சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

விசேஷ
விளம்பரத்திற்கு!

விசேஷ
விளம்பரத்திற்கு!

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் தேதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௧] யாழ்ப்பாணம்:— விஷு வருஷ ஆடி மீ ௨௭ வ (1941 அக்கஸ்ட் 11 திங்கட்கிழமை) [இலக்கம் ௧௪]

தமிழ் இலக்கிய மகா நாட்டுத் தலைமையுரை

(...ன்னைச் சர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர் சாகிப் திரு. S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L அவர்கள்)

(முற்றொடர்)

...ர் னூற்றில்,

'பாடுபெறு சிறப்பிற் கூடல்''

...1) எனவும்,

'பொன்மலி நெடுநகர்க் கூடல்''

...) எனவும் கூறப்படுகிறது. ...பாடலில் (19)

'புலத்தினும் போரினும் போர்
...வாக் கூடல்''

...வருகின்றது. அறிவுத்துறை ...ம் மதுரைமாநகரம் வென்றி ...டு விளங்கிற்றென்பது கருத்து. ...வாறு கூறப்பட்ட 'மாடமலி ...கிற் கூடற்' பதியை

பாடல் சான்ற பல்புகழ் முற்
கூடல்'' (பரிபாடல் 17) எனச்

...ச்சங்கப் புலவரொருவர் வாயாரப் புகழ்கின்றனர். இப்பதியின் ...ழு,

...தண்டமிழ் வேலித் தமிழ்நாட்
டகமெல்லாம்
...ன்ற நின்னிற் புகழ்பூத்த
லல்லது
...ன்றுத லுண்டோ மதுரை
கொடித்தேரான்
...ன்றமுண் டாகு மளவு'' (பரி
...ற்றிரட்டு. 8)

...ன்ற இங்ஙனம் விரித்தனர் ...தொரு சங்கப்புலவர். இப் ...ரும் பெயர் மதுரையைப் பற்றி ...ழுந்துள்ள கடைச்சங்கச் செய் ...களும் பலவாம். 'மதுரைக் ...ஞ்சி'யென இந்நகரின் பெயரால் ...மைந்துள்ள அடிநிமிர்ந்த செய் ...ன முன்னரே குறிப்பிட்டுள்ளேன். ...பாடல் என்னும் நூலிலே நான்கு ...ருஞ் செய்யுட்கள் இம்மதுரை ...றியன.

'வையையிரு பத்தா றுமாமதுரை
நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்''

...பது பரிபாடலின் அமைதி. ...வையேயன்றி, இந்நகரைப்பற் ...சங்கச் செய்யுட் டொடர்களும் ...வாம். இங்ஙனமாக, தமிழிலக் ...க்களின் பிறப்பகமாகிய கடைச் ...சங்கத்திற்கும் இம்மதுரைமா நகர்க் ...ம் மிகநெருங்கிய தொடர்புண்மை ...லாம். கடைச்சங்கப் புலவர் ...ருள் தலைவராய் விளங்கியவரும் ...றைவனென்றும் எனைத்து நாம் ...ன்மையென்று கண்டதனை நெஞ் ...றுதியுடன் அஞ்சாது கூறிய ஆண் ...மையுமாகிய நக்கீரர் இப்பதியின ...ராவர். 'மதுரைக் கணக்காய ...ர் மகனார் நக்கீரனார்' என அவரை ...ழங்குவர். அன்றியும் தமிழிலக ...ங்களுக்கு இலக்கணம் வகுத் ...த்த முதற்பெரு நூலாகிய ...தொல்காப்பியமும் இம்மதுரைப் ...பெருமொடு இயைபுடையதென வே ...துதற் கிடமுண்டு. அப்பெரு ...ல்,

''நிலந்தரு திருவிற் பாண்டிய
னவையத்து''

...அரங்கேற்றப்பட்டதென அந்நூ ...ன் பாயிரத்திலே பனம்பாரனார் கூறுதல் உணரத் தக்கது. பாண்டியன் அவை அவனது தலைநகரா ...ய மதுரையின் கண்ணதாதல் ...ண்டுமெனச் சொல்லவும் வேண்டுமோ?

இனி, இம்மதுரைப் பேரூரின் ...ரிதத்தை நினைத் தொடர்ந்து நோக் ...வோம். கலவி இந்நகரில் தழைத் ...தோங்கியதுபோலவே சமயவுணர்ச் ...சியும் தழைத்தோங்கிய தெனக் ...கூறல் வேண்டும். முதன் முதலாகப் ...பாண்டி நாட்டில் தோன்றிய சமயம் ...வைதிக சமயம்' என்று சொல்லு ...தற்கே சான்றுகள் உள்ளன.

''பணியிய ரத்தைநின் குடையே
முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ்
செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி
சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை
யெதிரே''

எனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடுகிறார். கடைச்சங்க காலத்து அரசாங்கம் ஒப்பிய சமயம் வைதிக சமயமேயாயினும், ஜைன சமயமும் பௌத்த சமயமும் தமிழ்நாட்டில அப்புராதன காலத்திலேயே புகுந்து விட்டன. இவ்விரு சமயத்தவர்களும் ஆங்காங்கே வதிந்து வந்து சமயத்தொண்டும் தமிழ் மொழித்தொண்டும் புரிந்து வரலாயினர். தமது அருஞ் செயலால் தமிழ்மக்கள் இதயத்தையும் இவர்கள் கவரலாயினர். சிற்சில காலங்களில் சமயம் பற்றிய வாதப் பிரதிவாதங்களும் நிகழலாயின.

"வாதிகை யன்ன கவைக்கதிர்
இறைஞ்சி
இரும்பு கவர்வுற்றன பெரும்புன
வரகே'' (மலைபடு. 112-3)

என வரகின் முற்றிப்பெருத்த கதிர்களுக்கு வாதஞ்செய்வோனது கையிடத்தது இணைத்த விரல்கள் உவமையாகக் கூறப்படுகின்றன. முதலின் ஜைனசமயம் சமாதான நெறியைக் கைக்கொண்டு தனது கொள்கைகளை அமைதியோடு பரப்பி வந்தது. வள்ளுவப் பெருந்தகையார் இயற்றியருளிய பெரு நூலை இதற்குத் தக்க சான்றாகும். இந்நூல் கடைச்சங்க காலத்துக்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்டதாகலாம். திருவள்ளுவர் ஜைனரென்பது 'மலர்மிசை யேகினான்' என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுளால் ஐயுறவிற் கிடனின்றி உணரலாகும். இவர் வாழ்ந்த திருநகர் இம்மதுரையே யென்பது இவரைப் 'போதார் புனற்கூடற்கு அச்சு' என ஆன்றோர்கள் கூறுவதால் அறியலாகும்; மற்று, பௌத்த சமய மோவெனின், சமாதான நெறியைவிடுத்து வாதப் போரால் வெற்றிகொள்ளத் துணிந்தது. இவ்விரண்டு மனப் பான்மைகளும் வள்ளுவர் நூலுக்கு இரண்டொரு நூற்றாண்டு பிற்பட்டுத் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காவியங்களால் உணரக் கிடக்கின்றன. ஜைன காவியமாகிய சிலப்பதிகாரத்தில் வைதிக சமயம் இழிக்கப்படவில்லை. பௌத்த காவியமாகிய மணிமேகலையில் 'ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை' முழுவதும் வைதிக கொள்கையின் இகழ்ச்சியுரையாகும். இந்நூலில், பிறஇடங்களிலும் இவ்விகழ்ச்சிக் குறிப்பு ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. இவ்விரண்டு காப்பியங்களும் மணிமேகலை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய தென்பது இங்கே மனங்கொள்ளத் தக்கது.

காலடைவில் பௌத்த சமயம் வலிகுன்றிவிட்டது. ஜைனசமயம் வலிபெருகிக் கொண்டே வந்து இம்மதுரையை முற்றுகையிட்டது. அரசனைத் தன்வயமாக்கி 'அரசாங்க சமயம்' என்னும் நிலையையும் அடைந்தது. 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' யாகலின், குடிகளும் இச்சமயத்தைத் தழுவலாயினர். வைதிக சமயம் தன் உயிரின் பொருட்டுப் போராட நேர்ந்தது. தொன்மை தழுவி நிற்பவர் பெண்கள்; இவர்களே வைதிக சமயத்திற்கு ஊற்றங்கோலாயிருந்தவர்கள். மதுரையரசனது திருத்தேவியாகிய மங்கையர்க்கரசியார் சம்பந்தப் பெருந்தகையாரை இந்நகர்க்குச் சார்ந்து ஜைனவாதின் வென்று, அரசனை மீட்டு, சைவசமயத்தை மீண்டும் அரசாங்கச் சமயம் ஆக்கியமை பிரசித்த

தொடர்ச்சி 4ம் பக்கம்

திருவாங்கூரிற் புகையிலைத் தீர்வை

யாழ்ப்பாண மகாநாட்டின் யோசனை

யாழ்ப்பாணம், ஆக 5

மலையாளப் புகையிலை வர்த்தகத்தில் சம்பந்த முள்ளவர்களின் மகாநாடு ஒன்று நேற்றுக்காலை யாழ்ப்பாணக் கச்சேரியில் மாகாணத்தலைவர் திரு. எம். பிரசாத் தலைமையில் நடைபெற்றது. திருவாங்கூர் மதுக் கோம்மிஷனர் திரு. பி. ஜீ. நாராயணன் உன்னித்தானும் மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருந்தார்.

திரு. உன்னித்தானைத் தலைவர் வரவேற்கும்போது, யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளத்தில் இறக்குமதியாகும் புகையிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கும் தீர்வையைக் குறைக்கும் விஷயத்தில் ஒரு சமரசமான முடிவு ஏற்படுமென்று தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

திரு. உன்னித்தான் பேசும்போது அவர்கள் கூறிய ஆலோசனைகள் யாவையும் முரண்பாடின்றித் திருவாங்கூர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகத் தெரிவித்துத் தாம் சந்தித்த யாவரும் தாம் விரும்பிய தகவலைச் சிரத்தையோடு தெரிவித்தது ஒரு நம்பிக்கையான அறிகுறியாகுமென்று சொன்னார்.

அடுத்தபடியாக அரசாங்கசபை அங்கத்தவர் திரு. எஸ். நடேசன் பேசும்போது திருவாங்கூர் மதுக் கோம்மிஷனரின் விஜயத்தின் பயனாகத் திட்டமான புகையிலைத் தீர்வை திருவாங்கூரில் நிர்ணயிக்கப்படுமென்றும் தாம் நம்புவதாகக் கூறினர்.

பெரிய வியாபாரிகளின் பிரசாரத்திற்கிடங்கொடாமற் புகையிலை விவசாயிக்கு ஆதரவளிக்கும்படி மயிலிட்டிக் கிராமச்சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் திரு. எஸ். நடேசனைக் கேட்டுக்கொண்டார். புகையிலை வியாபார வீழ்ச்சிக்கு நாட்டுக்கோட்டைச் செட்டிகளே காரணமென்றும் அவர் கூறினர்.

யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் காரியதரிசி திரு. ஏ. டப்ளியூ. நடராஜா சங்கத்தின் சார்பாகப் பேசும்போது திருவாங்கூர்ப் புகையிலையை வேணுமென்று ஒருபோதும் யாழ்ப்பாண மக்கள் விற்பனைக்கு விடாமல் இருந்ததே யில்லையென்று உறுதியாகச் சொன்னார்.

திரு. என். ஏ. சுப்பையா வர்த்தகத்தின் சார்பாகவும் திரு. ஸி. அருளம்பலம் யாழ்ப்பாணச் சங்கத்தின் சார்பாகவும் பேசினர்.

தலைவரின் யோசனை

ஒரு பொது விவாதத்தை ஆரம்பிக்குமுன்னர்க் கழிவுக்கு இடமின்றி ஒரு சீர்திருத்தமான தீர்வையை ஏற்படுத்துவது நலமென்றும், கண்டி ஒன்றுக்கு ரூ 135 வீதம் விதிக்கலாமென்றும் கழிவுப் பிரச்னை பொதுவாக வர்த்தகத்திற்கு இடையூறு உண்டுபண்ணுமென்றும் தலைவர் கூறினர்.

பின்னர்க் கூட்டுறவு இலாகா உதவி ரிஜிஸ்ட்ரார் திரு. ஸி. ஆறுநாதன் பேசும்போது யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச்சங்கம் ஒரு வர்த்தகசங்கமோ அல்லது அரசியல் வாதிகள் சங்கமோ அல்லவென்றும் அது விவசாயிகள் சங்கமென்றும் அதன் நோக்கம் வர்த்தகரையுந் தரகரையும் நீக்கிவிடுவதே என்றும் கூறினர்.

யுத்தஞாபகச்சின்னம் அப்புறப்படுத்தப்படும்

இராணுவ சம்பந்தமான காரணங்கள்

கொல்பேட்டியிலுள்ள யுத்த ஞாபகச் சின்னம் இராணுவசம்பந்தமான காரணங்களை யொட்டி அப்புறப்படுத்தப்பட்டு விடுமென்று சென்ற புதன்கிழமை பதிற் பிரதம காரியதரிசி காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை கூறுகின்றது.

மேற்படி ஞாபகச் சின்னத்தைப் பெயர்த்தெடுத்து அப்புறப்படுத்தும் வேலை உடனே ஆரம்பிக்கப்பட்டுவிடும்.

இச்சின்னத்திற்கு 1921ம் ஆண்டு டிசம்பர் 7ந் திகதி அப்பொழுது தேசாதிபதியாயிருந்த ஸேர். வில்லியம் மனிங் அஸ்திவாரக்கல் நாட்டினர். அவர்தான் 1923ம் ஆண்டு அக்டோபர்மாசம் 27ந் திகதி பூர்த்தியான சின்னத்தைத் திறந்தும்வைத்தார்.

யுத்தம் முடியும்வரை இச்சின்னத்தை மீண்டும் நிறுத்தக்கூடாதென்றும், யுத்தமுடிவுக்குப் பிறகு தக்க இடத்தில் அதை ஸ்தாபிக்கும் விஷயம் பற்றி ஆலோசிப்பதென்றும் பழைய யுத்த வீரர்கள் சங்கத்தைக் கலந்துகொண்டு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரவிபத்துக்குப் பலியான தம்பதிகள்

றேடியோப்பெட்டி மின்சார இணைப்பிற் சிக்கி மரணம்

கல்கத்தா, ஆக 3

கல்கத்தாவின் தென் சுற்றுப்பக்கத்திலுள்ள பாலிகஞ்ச் என்ற இடத்தில நேற்றிரவு றேடியோக்கம்பி பட்டதால் ஏற்பட்ட மின்சார அதிர்ச்சியின் விளைவாக ஒருபுருஷனும் மனைவியும் மாண்டுவிட்டனர்.

44வயதான நிர்மல் குமாரகோஷ் என்பவர் மியூஸியத்தைச் சேர்ந்த புராதன நாகரீக சின்ன ஆராய்ச்சி இலாகாவில் வேலைசெய்து வந்தார். நேற்று இவர் காரியாலயத்திலிருந்து திரும்பியதும் உதைபந்து சம்பந்தமான செய்திகளைக் கேட்பதற்காகத் தமது வீட்டின் மாடியிலிருந்த 'றேடியோ செற்றை' முடுக்கினர். அந்தச்சமயத்தில் அவரது மனைவியான மமதாகோஷ் கீழே சமையல் செய்துகொண்டிருந்தாள். குழந்தைகள் மேல் மாடியில் விளையாடிக்கொண்டிருந்தன.

அச்சமயத்தில் 11 வயதான அவருடைய மூத்தபெண் திடீரென்று றேடியோக் கம்பியைத் தொட்டதால் மின்சாரத்தாக்கு உண்டாயிற்று. அதன் கதறல் கீழே இருந்த தாயாரின் காதில் விழவே, அவள் மாடிக்கு ஓடிவந்து குழந்தையைத் தூர இழுத்தாள் ஆயின், அவள்பேரிலும் கம்பி பட்டுவிடவே, அவளும் அலறினள். அதைக் கேட்டதும் நிர்மலகுமார் விரைந்துவந்து அப்புறப்படுத்தும்போது அவர்பேரிலும் கம்பிபட்டது. அவரும் சத்தம்போடவே அக்கம் பக்கத்திலிருந்தவர்களெல்லாம் ஓடிவந்து மின்சார ஓட்டத்தை நிறுத்திவிட்டனர். எனினும் பயனில்லை. புருஷனும் மனைவியும் ஏற்கனவே இறந்துகிடந்தனர்.

இந்தியா-பர்மாத் தேர்தல்கள்

ஒத்திவைப்புச் சட்டத்தின்மீது விவாதம்

லண்டன், ஆக 5

இந்தியா பர்மாத் தேர்தல்களை ஒத்திவைப்புச் சட்டம் இன்று இரண்டாம் முறையாகப் பிரபுக்கள் சபையில் பிரேரிக்கப்பட்டது. இம் மசோதா இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள சட்டசபைகளின் ஆயுட்காலத்தை யுத்த முடிவிற்குப் பின் ஒரு வருஷம்வரை நீடிக்கச் செய்யும் அதிகாரத்தைத் தேசாதிபதிகளுக்கு அளிக்கிறது.

மசோதாவைப் பிரேரிக்கையில் இந்தியா பர்மா உதவி மந்திரியான டெவன்ஷயர் கோமகன் கூறியதாவது:- ஆக்கிரமிப்பு பிராந்தியத்தில் நிலைமை நெருக்கடியடைவதால் பர்மாவிலும் யுத்தம் பரவக் கூடும். இந்தியா இப்பொழுது பெரிய தொரு போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருப்பதால் இச்சமயம் தேர்தல்கள் நடத்துவது நாட்டிலுள்ள வகுப்புத் தகராறுகளை அதிகப்படுத்துவதுடன் போராட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் கெடுத்துவிடலாம். பர்மாவில் வகுப்புத் தகராறுகள் இல்லையாதென்றாலும் வருங்காலத்தில் நிலைமை அப்படியே இருக்கும் என்பது நிச்சயமில்லையாகையால் அங்கும் தேர்தல்கள் நடத்துவது சரியல்ல.

தென்னிந்தியாவின் அபிப்பிராயம்

ஸர். பாஜ்பாயிடம் தெரிவிக்கப்பட்டது

இந்தியா பர்மா ஒப்பந்தம்

சென்னை ஆக 4

சென்ற திங்கட்கிழமை சென்னை கோகலே ஹோலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கொமிற்றி அங்கத்தினர்களின் தூதுக்கோஷ்டியினர் நேற்று மாலை அரசாங்கக் காரியாலயத்தில் ராஜப்பிரதிநிதி நிர்வாக சபை அங்கத்தினரான ஸர். ஜீ. எஸ். பாஜ்பாயைப் பேட்டிகண்டார்கள். ஸர். முகமது உஸ்மான் தூதுக்கோஷ்டியின் தலைவராக இருந்தார். இந்திய அரசாங்கக் கூட்டுக்காரியதரிசி மிஸ்டர் ஜீ. எஸ். பாஸ்மனும் அப்பொழுது பிரசன்னமாகவிருந்தார்.

3½ மணி நேரம் விவாதம்

தூதுக் கோஷ்டியினர் மேற்படி ஒப்பந்தம்பற்றித் தென் இந்தியாவின் அபிப்பிராயத்தை எடுத்துரைத்து ஒப்பந்தம் திருத்தியமைக்கப்படவேண்டுமென்றும் அதுவரை அதை நடைமுறைக்குக் கொண்டுவரக் கூடாதென்றும் தெரிவித்துக்கொண்டனர். சென்ற சனிக்கிழமை இராஜப் பிரதிநிதியைப் பேட்டிகண்டு சமர்ப்பித்த மகஜரிற் கூறியிருக்கும் விஷயங்களையும் தூதுக்கோஷ்டியினர் தெரிவித்தனர். ஒப்பந்தம் சம்பந்தமாக இருசாரினருக்கும் ஏறக்குறைய மூன்றரை மணி நேர விவாதம் நடைபெற்றது.

இன்று மாலை ஸர் பாஜ்பாய் தென்னிந்திய வியாபாரச் சபையின் நிர்வாகசபை அங்கத்தினர்களைச் சந்தித்து இந்தியா-பர்மா ஒப்பந்தம் பற்றிப் பேசுவார்.

இந்தியாவுக்குப் பர்மியத் தூதுக்கோஷ்டி

றங்கூன் ஆக 3—

இந்திய பர்மா குடியேற்ற ஒப்பந்தம் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தைப் பேட்டிகாண இந்தியாவுக்குப் பின் வருபவர்கள் தூது செல்லப் பர்மா இந்திய வியாபாரச் சங்கம், பர்மா இந்தியர் சங்கம் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம் ஆகியவற்றால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தூதுக் கோஷ்டியின் தலைவர் மிஸ்டர் தயாப்ஜி காரியதரிசி ஸ்ரீ தாதாசஞ்ஜி அங்கத்தினர்கள்:- திருவாளர்கள் ஏ. எனா. ஹாஸி ஏ. எம். எம். வெள்ளையன் செட்டியார் ஆர். ஜீ. ஐயங்கார், டாக்டர் தூகன்.

இந்தியாவிலிருந்து ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார்ஸர், ஆசம் ஜீ ஹாஜீ தாவுத் ஆகிய இருவரும் இந்தத் தூதுக்கோஷ்டியுடன் சேருவார்கள்.

தேசிய ஜீவன்

ஸ்ரீ அரவிந்தர்

மொழி பெயர்த்தவர் ஸ்ரீ கோதண்டராமன், எம். ஏ., பி. எல்.

இந்து சமயத்தின் பழைய சம்பிரதாயங்களில் ஊறி நிறை அம்சம் தாமத குணம் வாய்ந்தமை, செயலற்று, அஞ்ஞானத்தில் உழன்று, சிருஷ்டிக்கும் ஆற்றலற்றும் இருந்தது. இருந்தும்கூட அதன் எதிர்ப்பை நாட்டைக் காப்பாற்றியது. எனவே இருந்ததைக் காட்டிலும் வெகுதுரிதமாகவும், பூரணமாகவும் ஏற்பட்டிருந்த சீர்குலைவைத் தடுத்ததும் அதுவே. இன்னும் பிழைத்திருந்த தேசிய ஜீவன் தனதாக்கித் தன் நிலையை அறிந்து கொள்ளுவதற்குப் போதுமான ஓர் இடைக்கால ஓய்வை அளித்ததும் அதுவே.

பாரத ஜீவன், சமயத்தில் தான் முதன் முதலாக விழிப்புற்று வெற்றியடைந்தது. இவ்விஷயத்தில் முதற் குறிப்புக்கள் வெகு காலமாகத் தோன்றியிருந்தன. முன்னணி வேலையை நிறைவேற்றப் பல பெரியோர் உதித்தும் இருந்தனர். ஆனால், கல்கத்தாவில் கல்விபதிவுள்ள வாலிபர்களில் மணிபோன்று விளங்கிய சிலர், எழுத்தறிவற்றவரும், அந்நிய சிந்தனைகள், கலைகள் ஆகியவற்றின் வாசனை சிறிதுமிலாதவரும், ஆயினும் சுயம் பிரகாசமானவரும், பக்திப் பரவசம் கொண்டவரும், மகா ஞானியுமான ஓர் இந்து துறவியின் தாமரைத் தாள்களைப் பணிந்த பின்னரே போராட்டத்தில் வெற்றியேற்படலாயிற்று. உலகை மாற்றுவதற்கென உதித்த வீர புருஷரான விவேகானந்தரைக் குருநாதர் தேர்ந்தெடுத்தார். பாரத நாடு விழிப்புற்றிருப்பது தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டுமல்ல; உலகில் வெற்றி பெறுவதற்காகவே. இதற்கு விவேகானந்தரின் திக்விஜயமானது, ஒரு முதல் அறிகுறியாக எல்லோருமறிய விளங்கலாயிற்று.

தற்காப்பு மட்டுமல்ல ஆக்கிரமிப்பும் அவசியமே

விழிப்பு முற்றிலும் ஏற்பட்ட பின், தேசிய இயக்கத்தைச் சார்ந்த ஒரு பகுதியினர், பிரிட்டிஷார் வருவதற்குச் சிறிது முன் நம் நாடு இருந்த நிலைமையின் முழு விபரங்களையும் தங்கள் கற்பனையால் உருப்படுத்த ஆரம்பித்தனர். இது தாமத குணமாகாது; விரிவடையவோ, மாறவோ மறுப்பதைத்தான் நமது தத்துவம் 'தாமதம்' எனக் கூறுகிறது. தாமத குணம் மிகுந்தால்தான் அது சீரழிவினும் மறைவினும் முடிவடைகின்றது. தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஆக்கிரமிப்பதும் அவசியமாகும். சக்தியானது வெல்லாது நின்றுவிடுமாயின், அது உயிரற்றுவிடும். எது, தற்காப்பின் பொருட்டு இருந்தவிடத்தைவிட்டு நகராமல் இருந்துவிடுகின்றதோ, எது (சமீபத்தில் மறைந்த 'சக்தியா' எனும் பத்திரிகை கூறும் வண்ணம்) தன் ஆதாரக் கோட்டைக்குள் பின்வாங்கிப் பதுங்கிவிடுகின்றதோ, அது தோல்வியுற்று ஆகும், உயிர்ப் பொருள்களிலிருந்து மறைந்தொழியும். அழிவே அதன் கதியாகும்.

இந்துசமயத்திற்கு வேண்டுமென வு நெகிழும் தன்மையும், விடுக் கொடுக்காமல் ஆக்கிரமிக்கும் இயல்பும் உண்டு. அது தன்னைத் தாக்க வந்த சக்தியின் மீது பாய்ந்தும், அச்சக்தியின் ஸ்தானங்களைக் கைக்கொண்டும், அதன் செல்வங்களைக் கொள்ளையடித்தும், மதிப்பிற்குரியனவற்றைத் தனதாக்கியும், கடைசியாக, அதை முற்றிலும் தன்னுட் சேர்த்துக் கொண்டோ அல்லது அது இனியும் நாட்டில் நீடித்திருப்பது வீண் அல்லது முடியாத காரியம் என்னும் நிலைமையை உண்டாக்கி அதைத் தூக்கியோ விட்டிருக்கிறது. அது தற்பாதுகாப்புக்காகப் பதுங்கியிருந்த காலங்களிலெல்லாம், தன் குறுகிய எல்லைக்குள் சுருங்கியும், தற்காலிகமாகச் செழிப்பின் சின்னங்களை வெளிப்படுத்தியும் வந்திருக்கின்றது.

சமூக அரசியல் வாழ்க்கை இந்திய மயமாதல்

சமய விஷயங்களில் சமுதாய ஜீவன் விழிப்படைந்து விட்டது. இனி அது தேசிய வாழ்க்கைக்குரிய ஆத்மீகம், அறிவு ஆகியவை சம்பந்தமான முயற்சிகள் யாவற்றினும் முற்றிலும் ஈடுபடுவதற்குக் காலமும் சந்தர்ப்பமும் வர வேண்டியதாக இருந்தது. வங்காளப் பிரிவினைக்குப் பின் ஐரோப்பியருக்கு விரோதமாக ஓர் உணர்ச்சி பொங்கியெழ ஆரம்பித்தபோது, அச்சந்தர்ப்பம் வாய்த்தது. சினம், பழிவாங்கும் குணம், பகைமை, இவை மெச்சத்தக்க குணங்களல்ல. ஆயினும், இறைவன் தான் கருதிய கருமங்களுக்காக இவற்றையும் பயன்படுத்தித் தீமையினின்று நன்மை விளையுமாறு செய்கிறான். இவை அசட்டையையும் அலட்சியத்தையும் போக்கி ஆற்றலையும் சக்திவாய்ந்த உள்ளத் தெழுச்சிகளையும் உண்டாக்கின. சமுதாய ஜீவன் இவற்றைப்பற்றி எதிர்கால லட்சியங்களுக்காகப் பயன்படுத்திக்கொண்டது. ஐரோப்பியர் மீதுள்ள கோபம், அவர்களுடைய வியாபாரப் பண்டங்களின் மீதுள்ள பழிவாங்கும் வெறுப்பு, அவர்களோடு தொடர்புற்ற யாவற்றின்மீதும் ஒரு துவேஷம், ஆகிய இவையெல்லாம் சமீபகாலமாக ஏற்பட்டிருந்த ஆங்கில மோகத்திற்கு எதிராக ஒரு பலமான மனப் போக்கைத் தூண்டிவிட்டன. நமது சமய வாழ்வில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த உணர்ச்சியானது விரிவான இவ்வழியின் மூலமாக அரசியல் துறையிலும் நுழைந்து, நாட்டின் பண்டைச் சிறப்பின்பால ஓர் சக்தி வாய்ந்த ஆவலையும், உண்மையான தேசிய எதிர்கால வாழ்க்கையின் பாலதைவிட மகத்தானதும் தீவிரமானதுமான ஓர் ஆர்வத்தையும் எழுப்பலாயிற்று.

பாரத ஜீவன் நமது தற்கால அரசியல்துறை முழுவதையும் இன்னும் வெல்லவில்லை, ஆயினும், உணர்ச்சியைப் பொறுத்த மட்டில் அது வெற்றியடைந்தே உளது. மற்றவையெல்லாம் காலா காலத்தில் வரவேண்டியவையே. இன்று அரசியல் துறையில் நடைபெறுவது யாவும், பாரதஜீவன் உண்மையாகவும் சக்தியுடனும் வெளிப்படத் தயாராவதற்குத் துணைபுரிந்து வருகின்றன. நமது எதிர்காலத்தைப் பற்றி ஓர் திடநிச்சயம் ஏற்பட்டுள்ளது. சமயமும் அரசியலுமே சமுதாய ஜீவனின் மிகச் சக்தி வாய்ந்த, ஜீவாதாரமான வெளிப்பாடுகளாகும். இவை தேசியமயமாய் விடுவது திண்ணம். நமது சமய, அரசியல வாழ்க்கையின் தேவைகள், இன்று உண்மையான, ஜீவாதாரமான சக்திகளாக விளங்குகின்றன. இத்தேவைகளே நமது சமூகத்தைத் திருத்தியமைக்கும். இவையே நமது தொழில், வியாபார சம்பந்தமான வாழ்க்கையைச் சிருஷ்டித்துப் புது வடிவத்தில் அமைக்கும். இவையே, புதிய வெற்றி திகழும் கலை, இலக்கியம், சாஸ்திரம் தத்துவஞானம் ஆகியவற்றிற்கும் அடிகோலும். இப்புதுக் கலைகள் முதலியன இந்திய மயமாக இருக்குமே யொழிய ஐரோப்பிய கலைகளாக இரா.

வங்க இலக்கியமும் கலையும் தேசிய மயமாதல்

வங்கக் கலையிலும் இலக்கியத்திலும் இவ்வெழுச்சி ஏற்கெனவே வேலை செய்து வருகின்றது. சமூ

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழக தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஆடி மீ ௨௭ உ திங்கட்கிழமை

கவீந்திரரின் பிரிவு

உலகத்திலே ஒப்பாரும் மிக்காருமற்ற கலாஞானியாக இக்காலத்தில் விளங்கியவர் கவீந்திரராகிய ரவீந்திரநாத தாகூர். "தேவரனையர் புலவர்" என்ற வாக்கியம் இப்பெரியாருக்குப் பெரிதும் பொருத்தமுடையது. இக் கவிசக்கரவர்த்தியின் வாழ்க்கை பழைய முனிவர்களுடைய ஆச்சிரம வாழ்க்கையையும் ஒருபால் ஒத்ததாகும். இவருடைய சாந்திநிகேதனம் என்னும் வித்தியாசாலை இக்காலத்தில் உலகமக்களெல்லாராலும் பாராட்டப் பட்டது. எங்கள் கம்பர், சம்ஸ்கிருத கவியாகிய காளிதாசர் முதலிய அக்காலத்துப் புலவர்களெல்லாரும் ஒவ்வொரு பாஷையிலேயே கவியரசர்களாக விளங்கினார்கள்; ஆனால் இக் கவீந்திரர் தமது தாய்மொழியாகிய வங்காளப் பாஷையில் மாத்திரமல்லர் ஆங்கிலத்திலும் ஆங்கில மக்களும் பாராட்டும் சிறந்த கவியரசராய் விளங்குபவர். இவருடைய நூல்கள் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கில பாஷையில் மொழிபெயர்க்கப் பட்டவைகளுள் மிகச் சிறந்தவை 'கீதாஞ்சலி' 'சித்திரா' என்னும் இரு நூலுமென்பர். இவற்றின் பொருட்டுக் கவீந்திரர்க்கு உலகப் பிரசித்தி பெற்ற எவராலும் இலகுவிற் பெறுதற்கரிய 'நோபல்' பரிசு 1913-ம் ஆண்டில் வழங்கப் பெற்றது. இந்து மக்களுள் முதன் முதல் இப் பரிசைப் பெற்றவர் தாகூரவர்களே யாவர். அடுத்த ஆண்டில், எங்கள் அரச சக்கர வர்த்தியாகிய ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் இப் புலவர் திலகருக்கு "ஸேர்"ப் பட்டம் வழங்கினர்; ஆனால் காலகதியில் இப்பெரியார் அப் பட்டத்தைத் தமக்கு வேண்டாமென விலக்கிவிட்டனர்.

இரவீந்திரநாத தாகூர் கலாஞானியாக விளங்கியதோடு மாத்திரம் அமையாது அரசியல் ஞானியாகவும் விளங்கியவர். இப்பெரியாருடைய கொள்கைகளை மகாத்மாகாந்தி முதலிய இந்திய தலைவர்களும் வேற்றுத் தேயங்களிலுள்ளாரும் மெச்சி வருவாராயினர். சுயராச்சியம் இந்திய மக்களின் பிறப்புரிமை யென்பதைப் பாரத மக்களுக்கும் உலகத்தில் உள்ள ஏனைய மக்களுக்கும் எடுத்து விளக்கியவர் இக் கவீந்திரரே யெனச் சொல்லப் படுகின்றது. தாம் சரியெனக் கண்டதைத் தாபிக்கும் விஷயத்திலே எவர்க்கும் அஞ்சுபவரலலர். உலகத்திலேயுள்ள எல்லாச் சாதியாராலும் எல்லாச் சமயத்தவராலும் எல்லாத் தேசத்தவராலும் எல்லா மொழியினராலும் பாராட்டப்படும் பெரும் புலவர் இரவீந்திரநாத தாகூர் என்பதை எவரும் மறுத்துரைத்தல் முடியாதெனலாம். இப்படிப்பட்ட மகான்களையே செத்துஞ் சாகாதவரென்று உலகம் போற்றும். கவீந்திரராகிய இரவீந்திரநாத தாகூரின்பிரிவு அவர் பிறந்த ஊராகிய வங்காளத்திற்கு மாத்திரமல்ல, உதித்த நாடாகிய பாரதநாட்டிற்கல்ல, உலகம் முழுவதற்குமே தீராக் கவலையைத் தருவதாகும். ஆயினும் அவருடைய புகழுடம்பும் இக்காலத்தவர்க்கு மாத்திரமல்லப்பிற்காலத்தினர்க்கும் எக்காலத்தினர்க்கும் கல்வியின் மகத்துவத்தைத் தெருட்டிய வண்ணமே விளங்கு மென்பதற்குச் சந்தேகமில்லை.

பிரத்தியேக இலாகா

கல்வி நிர்வாகசபைக் கூட்டத்திற் சிபார்சு

கொழும்பு ஆ°, 10— கல்வி நிர்வாகசபையின் கூட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. "டெக்னிக்கல்" (வர்த்தகம் தொழில் முதலியவற்றைப்பற்றிப் போதிக்கும்) கலாசாலைகளைப் பிரத்தியேகமாக ஓர்இலாகாவைச் சிருஷ்டிக்கவேண்டுமென்று நிர்வாகசபைக் கூட்டத்திற் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இப்போது அக்கலாசாலை வித்தியாபகுதியின்கீழ் இருந்து வருகிறது. மேலேகூறிய சிபார்சு நடைக்கு வந்தால் இப்பொழுதுள்ள ஏற்பாடு மாற்றப்படும். இச்சிபார்சுக்கு அங்கீகாரம் பெறுவதற்காக இதுசம்பந்தமாக ஓர்அறிக்கை அரசாங்கசபையிற் சமர்ப்பிக்கப்படுமென்று அறியப்படுகின்றது. டெக்னிக்கல் கலாசாலையில் வேலைசெய்வதற்காகச் சிலபுதிய போதகாசிரியர்கள் தேவையென்பதைப்பற்றிப் பத்திரிகையில் விளம்பரஞ் செய்யவேண்டுமென்று குறித்த நிர்வாகசபை தீர்மானித்திருக்கின்றது.

ஹிந்து லீக்தலைவரின் ராஜிநாமா

யோத்மால் ஆக, 9,— அகில இந்திய ஹிந்து லீகின் தலைவர் பதவியையும் அங்கத்தவர் ஸ்தானத்தையும் திரு. எம். எஸ். ஆனே ராஜிநாமாச் செய்துவிட்டார்.

சைகோனில் ஜப்பான் ஆக்கிரமிப்புப் பூர்த்தி

சைகோன், ஆக, 8உ ஜப்பானால் அனுப்பப்பட்டுள்ள துருப்புக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இங்கு வந்து சேர்ந்து விட்டனர் என்றும் மீதமுள்ள துருப்புகள் இன்னும் ஒரு வாரத்திற்குள் வந்து சேர்ந்து விடுமென்றும் தெரிய வருகிறது. சைகோனில் துருப்புக்கள் வந்து இறங்குவதற்கு வசதியாக முதற்றரமான நிரந்தரதளத்தை ஏற்படுத்த ஜப்பானியர்கள் முன்னேற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். "மோரிகல் ஜோப்ரி" என்னும் கப்பல் 55 அமெரிக்கர்களை ஏற்றிக்கொண்டு இங்கிருந்து மனிலாவுக்குப் புறப்பட்டு விட்டது. இங்கிருந்து 15 ஆங்கிலேயர்கள் சிங்கப்பூருக்குத் திங்கட்கிழமை புறப்பட்டுச் செல்லுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. பின்பு 15 பிரிட்டிஷ்காரர்கள (பிரிட்டிஷ் ஸ்தானிகர் அவரது காரியாலயத்தினர் உட்பட) இங்கு தப்பியிருப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

கலாபவனத்தில் தேசாதிபதி

சித்திரக்காட்சியைத் திறந்து வைத்தார்

கொழும்பு, ஆக. 10உ நேற்றுக் காலை 9 மணிக்கு மே. த. தேசாதிபதி கலாபவனத்தில், இலங்கைச் சித்திரக் கலாசங்கத்தின் வருடாந்தக் கண்காட்சியைத் திறந்து வைக்கும்படி மிஸ்டர் வில்லே மே. த. தேசாதிபதியைக் கேட்டுக் கொண்டார். அச்சமயத்தில் அவர் காலஞ் சென்ற கவியரசர் தாகூரையும் புகழ்ந்து பேசினாரென்பது குறிப்பிடத்தக்கது.

மாங்கனிக் காட்சி

நல்லூரிலே நிகழும் ஆவணி மாசம் 13-ம் திகதிமுதல் 15-ந் திகதிவரையில் நடக்கவிருக்கும் ஆடு, மாடு, முதலாம் வளர்ப்பு மிருகக் காட்சியின்போது யாழ்ப்பாணம் மாமரவிருத்திச் சங்கமும் அங்கு சங்கிலித்தோப்பு என்னுமிடத்திலே ஓர் மாங்கனிக்காட்சி நடத்தவிருக்கின்றது. இக்காட்சி ஐந்து பிரிவாக நடக்கும். (1)திறமான உள்நாட்டு மாம்பழவகைகள் (2)இறக்குமதி செய்த மாம்பழவகைகள். (3)உள்நாட்டில் விளைவிக்கப்படும் வேறு நல்லின மாம்பழவகைகள். (4) மாங்காய் மாம்பழத்திலிருந்து செய்யப்பெற்ற வற்றல், சட்னி, ஊறுகாய், பானம், ஆதியன. (5)மாம்பழக் கடைகள், மாமரம் ஒட்டும் ஆயுதங்கள், கோட்டில் வைத்தமாங்கன்றுகளை உண்டாக்கும் திறமான முறைகள். இப்பிரிவுகளிலே முதற்றரமான காட்சிப்பொருள்களை வைப்பாருக்குப் பணப்பரிசுகளும், வெள்ளி மெடல்களும், நற்சாட்சிப் பத்திரங்களும் வழங்கப்படவிருக்கின்றன.

திருவாங்கூர் மதுக்கொம்மிஷனர் திரும்பினர்

யாழ்ப்பாணத்திற் புகையிலை பயிரிடும் முறைக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஆக 7 திருவாங்கூர் மதுக்கொம்மிஷனர் திரு. பி. ஜி. நாராயணன் உண்ணித்தான் இந்தியாவுக்குப் புகைவண்டி ஏறுவதற்கு முன்பாகக் கூடிய வரையில் முதற்றரமான புகையிலையை உற்பத்தி செய்வதற்காகயாழ்ப்பாண விவசாயிகள் நிலத்தைப் பண்படுத்தும் சிறந்த முறையைப்பற்றிப் பத்திரிகை நிருபர்களிடம் பிரஸ்தாபித்தார்.

கண்டியொன்றுக்கு ரூ. 2.00 வீதம் இப்பொழுது விதிக்கப்படும் புகையிலைத் தீர்வை யாழ்ப்பாண விவசாயிகளுக்குப் பெரும் பாதகத்தை உண்டுபண்ணுவதாக, வற்புறுத்தித் திரு. உண்ணித்தானிடம் விண்ணப்பங்கள் பல சமர்ப்பிக்கப்பட்டன.

புத்தர் சிலையின் மீதுள்ள கூரை

அகற்றுவதற்கு ஆலய அதிகாரிகளின் முடிவு

அநுராதபுரம், ஆக 7 ஔகணவிலுள்ள பௌத்த உருவச் சிலைக்கு ஆபத்து நேரிடக்கூடுமென்பதை உத்தேசித்து அதன்மேலிருக்கும் கூரையை எடுத்துவிட, ஔகண பௌத்த ஆலய அதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றனர்.

இப்பொழுது தெரு வசதியிருப்பதை முன்னிட்டுக் கலவிவாவிலிருந்து 2 மைல் தூரத்திலுள்ள இந்தப் பிரமாண்டமான சிலையைப் பார்ப்பதற்காக ஏராளமான யாத்திரிகர்கள் வருகின்றனர்.

இச்சிலையின்மீது அமைக்கப்பட்டிருக்கும் கூரை இரண்டு தண்டவாளத்தின்மேற் பொருத்தப்பட்டிருக்கிறது. பல வருடங்களுக்கு முன்னர் மாஹோ-கெக்கிராவைப் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டபொழுது புகையிரதத் தொழிலாளர் இதை அமைத்தனர்.

பலத்த காற்று வீசுங்காலத்தில் இக் கூரை விழ நேரிட்டால் சிலைக்குச் சேதமேற்படக் கூடுமென இப்பொழுது கருதப்படுகிறது. ஓடுகள் ஏற்கெனவே விழுந்துவிட்டன. குறித்த கூரை இப்பொழுது அசைந்துகொண்டே இருக்கிறது.

இலங்கைத் தேசியக் காங்கிரஸ்

அடுத்த மகாநாடு நடக்கும் இடம்

இலங்கைத் தேசியக் காங்கிரஸ் மகாசபையின் 22 வது வருடாந்த மகாநாடு டிசம்பர் மாதத்தில் கொழும்பிற்குச் சில மைல்கள் வடக்கேயும் வெண்ணப்புவாவிற்கு அருகேயும் உள்ள தம்மலதெனியாவில் நடைபெறும். கூட்டம் நான்கு நாட்கள் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. சிலாபம் டிஸ்திரிக்கிலுள்ள எல்லாக் காங்கிரஸ் கிளைகளும் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றன. வழக்கம்போல் சுதேசியப் பொருட்காட்சி நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இலங்கையிலிருந்து நன்கொடை

'கிராமோவான்' என்னும் ஓடும் கிராமபோன்

ரச்சி, ஆக 7 இலங்கைத் தோட்டத் துரைமாரின் சார்பாக ஸேர். விட்னிஆபிரஹாம்ஸ் "கிராமோவான்" என்னும் கிராமபோன் வாகனமொன்றை விமான எதிர்ப்புப் பீரங்கிப் படையின் பிரதம தளகர்த்தர் ஜெனரல் ஸேர். பிரெடிரிக் பைலுக்கு இன்று நன்கொடையாக வழங்கினர்.

எல்லாவிதமான பாட்டுகளும் உள்ள 200 இசைத்தட்டுகள் மேற்படி "கிராமோவானில்" இருக்கின்றன. இது தேசத்தின் பலபாகங்களுக்குஞ் சென்று பீரங்கிப்படையினருக்கும் சர்ச்லைட் படையினருக்கும் ஓய்வு நேரத்தில் சங்கீத விருந்தளித்து அவர்களை மகிழ்வுறச் செய்யும்.

வளவுக்குள் நுழைந்து அடித்ததாக வழக்கு

எதிரி பிணையில் விடப்பட்டார்

(சொந்த நிருபர்)

6-8-41

கொக்குவிலில் வசிக்கும் வயித்திலிங்கம் குழந்தைவேலு நாச்சிமார் கோவிலடியில் வசிக்கும் சண்முகம் சிங்காரத்தின் வளவுக்குட் சட்டவிரோதமாகச் சென்று பொல்லாலடித்துக் காயமுண்டாக்கியதாகக் குற்றஞ்சாட்டி ஓர் வழக்கை யாழ்ப்பாணம் போலிசார் யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குவின்டன் பேர்ணண்டோ முன்னிலையிற் றொடர்ந்தனர்.

செல்லம்மா கூறியவற்றின் சாரமாவது:—

சென்ற 4-8-41ந் திகதி இரவு நான் நித்திரையா யிருந்தபோது யாரோ அடித்த சத்தம் கேட்டு அந்த இடத்திற்குச் சென்றேன். அப்போது எதிரி அவ்விடத்தை விட்டு ஓடிப் போனதைக் கண்டேன். சிங்காரத்துக்கும் இரத்தக் காயம் இருந்ததைக் கண்டேன். இதற்கு 4 அல்லது 3 நாளைக்கு முன்னர் எதிரியும் வேறொருவரும் சண்டை பிடித்தபோது, சிங்காரம் விலக்குப் பிடித்தார். இதில் எதிரிக்குக் கோபம். ஆகையால இதைச் செய்திருப்பார். நீதிபதி எதிரியை 150 ரூபாப் பிணையில் விட்டு வழக்கை மேல் விசாரணைக்குத் தவணையிட்டார்.

பெண்சோர வழக்கு

எதிரிகட்கு வாறண்ட்

6-8-41

வண்ணார் பண்ணையில் வசிக்கும் நாகலிங்கம் மனைவி நாகமுத்து வென்பவளுடைய பாதுகாப்பிலிருந்த பதினறு வயதுக்குட்பட்ட இரத்தினம் அல்லது துரையம்மா வென்பவளை நன்னியன் வயிரமுத்து, செல்லன்-கந்தையா, சின்னையன்-வேலுப்பிள்ளை யாகியவர்கள் பாதுகாப்பினின்றும் கடத்திச் சென்றதாக ஒரு வழக்கை யாழ்ப்பாணம் பொலிசார் நீதிபதி மிஸ்டர் குவின்டன் பேர்ணண்டோ முன்னிலையில் தொடர்ந்தனர்.

நாகமுத்து கூறியவற்றின் சாரமாவது:-

சென்ற 2-8-41ந் திகதி என்னுடைய பேர்த்தி இரத்தினம் என்னுடைய பாதுகாப்பில் இருந்துவந்தாள். இவள் சென்ற ஏழு வருடகாலமாக என்னுடன் வசித்து வருகிறாள். இவளுடைய தாயார் இறந்துவிட்டாள். இச்சம்பவத்தன்று என்னுடையபேர்த்தி சமையலறையுள் நின்றபோது, சத்தமிட்டாள். அப்போது நான்பார்த்தேன், அந்தநேரத்தில் வேலுப்பிள்ளை அவளைத் தூக்கிக்கொண்டு சமையலறைக்கு வெளியே வந்தான். மற்றைய இருவரும் வேறு ஒருவனும் அவ்விடத்திற் சமுகமாய் நின்றனர். என்னுடைய மருமகன் S. சந்தையா அவளுக்கு உதவிபுரிய இடத்திற்குஓடினபோது வயிரமுத்து ஒரு பொல்லால் அவருக்கு அடித்தார். அவர்கள் பிள்ளையை ஒரு காரிற் கொண்டு சென்றனர். இச் சம்பவத்திற்குச் சில காலத்திற்கு முன்னர்ப் பிள்ளையை எதிரி கந்தையாவுக்கு விவாகஞ் செய்து வைக்கும்படி கேட்டபோது நான் மறுத்துவிட்டேன். பிள்ளை பதினறு வயதுக்குட்பட்டவள்.

இதன்பின்னர்ச் சிவனடியாள்-கந்தையா சாக்ஷியம் கூறியபின்னர் நீதிபதி எதிரிகட்கு வாறண்டு விடுத்து வழக்கை மேல் விசாரணைக்கு வருகிற 20-8-41ந்திகதிக்குத்தவணையிட்டார்.

ஹிட்லரின் குரு தற்கொலை

ஹிட்லரின் குருபோன்றவரும் பலநாஸிய திட்டங்களுக்குக் காரணருமான புரொபெசர்கார்ள் ஹோஷோபர் என்பவர் பவேரியசிறைக் கூடமொன்றிற் சென்றவாரம் தற்கொலை செய்து கொண்டாராம். அப்போது இவர் போட்ட தாளத்துக்கேலலாம் ஹிட்லர் கூத்தாடி வந்தாராம். ஹெஸ் பிருத்தானிக்குச் சென்றதும் இவர் சிறையிலே வைக்கப்பட்டனராம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

53-ம் ஆண்டு அறிக்கை

திருவருளை முன்னிட்டு இச்சபையின் நிர்வாகசபை 53-ம் ஆண்டு அறிக்கையை மகாசபைக்குச்சமர்ப்பிக்கின்றது.

இச்சபையின் 51-வது 52-வது வருடாந்தக் கூட்டம் 19-1-41-ல் அன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. ஆகவே இவ்வறிக்கை 1941-ம் ஆண்டு ஜனவரி மீ முதல் யூலை மீ வரையும் இச்சபை ஆற்றிய பணிகளைப் பற்றியும் சபையின் அபிவிருத்திக்குரிய வழிவகைகளைப் பற்றியும் கூறும்.

1941-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில சபையின் அங்கத்தினர் தொகை 51 ஆகும். இப்பொழுது இருக்குந் தொகை 98 ஆகும். நிருவாகசபையின் ஊக்கத்தினால் அங்கத்தவர் தொகை ஓரளவிற்குக் கூடியிருக்கின்றது. இப்பணி சம்பந்தமாக திரு. வே. சிவலிங்கம் அவர்கள் ஆற்றிய தொண்டு பாராட்டத்தக்கது. இத்தொகை கூடுவதற்கு இன்னும் எவ்வளவோ இடமுண்டு. சைவ அபிமானிகள் மனங் கொண்டால் தொகை கூடிக் கொண்டே வரும். குறித்த காலத்திற்குள்ளே 10 நிருவாகசபைக்கூட்டங்களும் 4 உப சபைக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. சைவத் திருவாளர் புரிசை சு. முருகேச முதலியாரைக் கொண்டு திருவிளையாடற் புராணப் பிரசங்கங்களும், பாரதப் பிரசங்கங்களும், கந்தபுராணப் பிரசங்கங்களும் ஆக மொத்தம் 15 வரை இச்சபை நடாத்தி இருக்கின்றது. சிவபுராணங்களின் உண்மைக் கருத்துக்களை உணராது சைவ ஆசார ஒழுக்கங்களையும் இக்காலக் கல்வி முறையால் நமமக்கள் மறந்திருக்கும் காலத்தில் அவர்களுக்கு அவற்றின் மகத்துவத்தை விளக்குவதற்குச் சைவத் திருவாளர் புரிசை சு. முருகேச முதலியார் அவர்களைப் போன்ற பெரியார்களுடைய பிரசங்கம் இன்றியமையாததாகும்.

புதுவருடத்திலன்று யாழ்ப்பாண மறியற் சாலையில் சமது சமயத்தைச் சேர்ந்த மறியற்காரர்களுக்குச் சமயப்பிரசங்கமும், சிற்றுண்டி வழங்கலும் நடத்தப்பட்டன. வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் கோவிலில சென்ற பங்குனி மாசத்தில நடந்த மகோற்சவத்தில இராக் காலங்களில் சுவாமி திருவுலா வரும்போது சுவாமிக்குப் பின் முறையாகத் தேவாரம் ஓதுதற்கு இச்சபையாரால ஒழுங்கு செய்யப்பெற்றது. இத்திருத்தொண்டைச் செவ்வனே நடத்துவதற்குத் துணைபுரிந்த திருவாளர் அ. இராசுப்பிள்ளை அவர்களுக்கு எங்கள் சபையின நன்றி உரித்தாகின்றது.

50 வருடங்களுக்கு மேற்பட யாழ்ப்பாணத்தில அரிய சமயத் தொண்டும், தாய்மொழித் தொண்டும், பொது நலத் தொண்டும ஆற்றி வருகின்ற எங்கள் சபைக்கு ஒரு நிலையமும், வாசிகசாலையும் இல்லாதது பெருங் குறையாயிருந்தது. ஒரு வீட்டை வாடகைக்குப் பெற்று அலுவலகத்தையும் வாசிகசாலையையும் சென்ற சித்திரை மீ இறைவனருளால் தொடங்கியிருக்கின்றோம். வாசிகசாலை தொடங்கின தினமே கந்தபுராணபடனத்தையும் விதிப்படி தொடங்கி நடத்தி வருகின்றோம்.

சைவத்தைப் பரிபாலிப்பதற்கு முதற்கண் இன்றியமையாதவராயிருப்பவர் சைவத்தை உணர்ந்து சைவவாழ்க்கை நடத்தும் தொண்டர்களேயாவர். அத்தகைமையுடையவர்களே சைவபரிபாலன சபையின் அங்கத்தவர்களாக இருக்க வேண்டும். சட்டநூல அறியாத ஒருவர் நீதிஸ்தலங்களில்ல வழக்கு நடத்துதல முடியாது. வைத்திய சாஸ்திரம அறியாத ஒருவர் உடல்நோய்க்கு மருந்து செய்ய முடியாது. அவ்வாறே சைவ அபிமானமும், சைவசமய அனுஷ்டானமும் இல்லாதவர்கள சைவத்தைப் பரிபாலிக்க முடியாது; 3 ரூபா கொடுத்த ஒருவர் சபையின் அங்கத்தவராகச் சேர்ந்து விடுதல மாத்திரம் போதுமென்று எண்ணொணாது. மேலே கூறிய தகுதிகளை அவர் இயலளவாயினும்பெற்றுக் கொள்ளுதல் அவசியமாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் காலத்திலுள்ள சைவப் பள்ளிக்கூடங்களிலும், சைவச் சங்கங்களிலும் பார்க்க இக்காலத்தில்ல பல மடங்கு அதிகமான பள்ளிக்கூடங்களும், சங்கங்களும் காணப்படுகின்றன. அவ்வாறிருந்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களைப் போலத் தூய்மையான சைவ வாழ்க்கையை நடத்துதற்கு ஒருவிதம் அல்லது அரைவிதம் நடத்துகின்ற ஆசிரியரையேனும் அல்லது பள்ளிக்கூட அதிகாரியையேனும் தேடிக் காண்டல் அரிதெனலாம். நாவலர் பெருமானுடைய உயர்ந்த வாழ்க்கை எத்தனையோ மக்களைச் சைவவாழ்க்கையில்வாழும்படி தூண்டியது. அதேபோல இக்காலம் சைவ வாழ்க்கை நடத்துகின்ற பெரியார் மூலம் சைவ சமயம் பொதுமக்களிடையே பரவவேண்டும். அசேதனப் பொருள்களாகிய கட்டடங்களும், மற்றைய உபகரணங்களும் மேலே காட்டிய இலக்கணங்கள் அமைந்த பெரியவர்கள் இல்லாவிட்டால சைவசமய வளர்ச்சிக்குப் பயன்படா.

இப்பொழுது எம் நூல்நிலையத்தில் இருக்கின்ற நூல்களை அங்கத்தவர்கள் சிரமமாகப் பெற்றுப்படித்தல அவர்களுக்கும் பிறருக்கும் நன்மையைப் பயக்கும். இப்பொழுது சபை நூல்நிலையத்தில் இருக்கும் தமிழ்ப்புத்தகங்களின் தொகை 407, ஆங்கிலப்புத்தகங்களின் தொகை 32. நூல் நிலையத்திற்குப் பணமும் புத்தகங்களும் உதவியோர்:

திருவாளர்கள்: டக்டர் சி. சுப்பிரமணியம் ரூ 100 கதிரேச அவர்கள் பெருமாள் கோவிலடி. அ. தில்லையம்பலம் வண்ணார்பண்ணை கா. அருளம்பலம் தி. சதாசிவ ஐயர் மு. மயில்வாகனம் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை ச. அருள்லிங்கம், சோதிடபரிபாலன அச்சயந்திரசாலை சைவப்பிரகாசயந்திரசாலை, திரு. சி. த. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் சி. வைத்தியலிங்கச் செட்டியார், க. வி. நடராஜன, வே. சிவலிங்கம்,அ விசுவநாதன், Lady இராமநாதன், சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, வே. மாணிக்கவாசகர், வே. விநாசித்தம்பி, நா. சண்முகம், வை. சிவசுப்பிரமணியம், சி. பசுபதிச் செட்டியார், சி. மருதமுத்தர், C. K சுப்பிரமணிய முதலியார், இராசா அருளம்பலம், வ. நடராசா இன்னும்பலர் புத்தகங்கள் உதவுவதாக வாக்களித்திருக்கின்றனர்.

நமது நாட்டிலே கிறீஸ்து மதத்தைப் பரப்புவதற்குக் கிறீஸ்தவர்களுடைய சங்கங்களிருக்கின்றன. பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு பௌத்த சங்கங்களிருக்கின்றன. இஸ்லாம மதத்தைப் பரப்புவதற்கு இஸ்லாம சங்கங்களிருக்கின்றன. இச்சங்கங்கள் எல்லாம் ஆங்கில மூலம் தத்தம் மத உண்மைகளைப் பரப்புகின்றன. இம்முறையைப் பின்பற்றி எங்கள் சபையும் ஆங்கில மொழி மூலம் எங்கள் சமய உண்மைகளைப் பரப்ப முயற்சி செய்ய வேண்டும். இக்காலம் ஆங்கிலங் கற்ற சில மக்கள் போதிய தமிழ் அறிவில்லாமையினுல் ஆங்கிலத்தில் வெளிவரும் மாயாவாத நூல்களைப்படித்துவிட்டுத் தாம் அவ்வாறு கற்றுக் கொண்டவை தான் சைவ சமய உண்மைகளென்று திரிபாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் முதலிய சமய குரவர்களைப்பற்றியும் மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார் முதலிய சந்தானகுரவர்களைப் பற்றியும்,(திரு பட்டினத்தடிகள், தாயுமானார் முதலிய பெரியடியார்களைப் பற்றியும் அவர்கள் அறிவதில்லை. இக்குறையைப் போக்குவதற்குத்தமிழ் அறிவில்லாதமக்களைத் தமிழைப் படித்துச் சைவசமய நூல்களைப் படிக்கச் செய்ய வேண்டும். அன்றேல் ஆங்கில மூலம் சைவ சமய உண்மைகளைப் புத்தக வாயிலாக அல்லது பத்திரிகை வாயிலாக நாங்கள் வெளியிட வேண்டும். ஆங்கில இந்துசாதனப் பத்திரிகை மூலம் சைவசமய உண்மைகளை இடையிடையே வெளியிடல நன்மை பயக்கும்.

சென்ற சித்திரை மாதம் சைவத் திருவாளர் சித. மு. சி. ப. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள சிதம்பரத்திற்குச் சென்று சிதம்பர ஆதாசாலை, புண்ணியகாச்சி தரும நிலங்களிலுள்ள கட்டடங்களைப் பார்வையிடவும், குத்தகைகளைப் புதுப்பிக்கவும், குத்தகைப் பணங் கொடாதவர்களை அந்நிலங்களினின்று அகற்றவும் குத்தகைப்பணத்தை அறவிடவுஞ் சென்ற அக்கடமையை முடித்துத் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குப்புண்ணியகாச்சி பெயரால் கட்டளை ஒன்று சிறப்பாகச் செய்வித்தும் வந்துள்ளார். இச் சிறந்த பணிகளை ஊக்கமாகப் பார்த்து வந்த செட்டியார் அவர்களுக்கு எங்கள் சபையின் நன்றி உரித்தாகின்றது.

புண்ணியகாச்சியின் தரும நிலங்களால் வருமதியான செல்லை திரு. ச. இராமலிங்கம் அவர்களின் முயற்சியினால சேர்ந்து வருகின்றதும். குத்தகைக்காரர் சிலர் குத்தகைச் சீட்டிற் காட்டியபடி செல்லைக் கொடுக்கத் தவறுகின்றனர். இக்குறையை நீக்க நாம் இயன்றளவு முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது புண்ணியகாச்சி தரும நிலங்கள் சம்பந்தமான வழக்குகள் அநேகம் வருடந்தோறும் நடந்து வருகின்றன. காலத்துக்குக் காலம் குத்தகைகளைப் புதுப்பிக்கவேண்டி இருக்கிறது. விளைவு காலத்தில செல்லை அறவிடவேண்டியிருக்கிறது. இப்பொழுது இவற்றையெல்லாம் திரு. ச. இராமலிங்கம் அவர்கள் பெருஞ்சிரமம் எடுத்து ஒரு வேதனமுமின்றிப் பார்த்து வருகின்றார். எங்கள சபை அவருடைய தொண்டைப் பெரிதும பாராட்டுகின்றது. நெடுக இவ்வாறு பார்த்து வருவது அவருக்கு மூப்படைந்த காலத்தில கஷ்டமாகவிருக்கும். அப்பொறுப்பை நிருவாகசபை அங்கத்தவர்களில் ஒரு இளம் ஆளிடம் ஒப்படைக்கவேண்டும். அல்லது சைவப்பிரகாச யந்திரசாலையில் ஒருவரை, தமது அச்சியந்திரசாலைக் கடமையோடு இக்கடமையையும் பார்த்து வர நியமிக்கவேண்டும். மேலும் புண்ணியகாச்சி தருமத்தால் வருகின்ற வருமானத்தைக் கொண்டு இப்பொழுது சிதம்பரத்தில் மாலை கட்டித் தெருவிலுள்ள நிலமுற்றிருக்கும் புண்ணியகாச்சி மடத்தைப் பாகம் பாகமாகக் காலந்தோறும் திருத்துதல் பெரும் புண்ணியமாகும்.

சைவப்பிரகாச யந்திரசாலையின் பொருள்நிலை சென்றகாலத்தைப் போலத் திருப்தியான நிலைமையில் இருக்கவில்லை என்பதை அறிந்து ஒரு சிக்கன உபசபையை நியமித்து இயன்றளவு சிக்கன முறைகளைக் கையாண்டிருக்கிறோம்.

இப்பொழுது நடக்கின்ற யுத்தங்காரணமாகக் காகிதம், யந்திரங்கள் முதலிய அச்சுக்குரிய உபகரணங்கள் பன்மடங்கு விலை கூடியமையும் ஊரிற் பணப் பஞ்சமும் நாட்டிலே அச்சியந்திரசாலைகள் அதிகப்பட்டமையும் சபையின் வருவாய் குறைந்ததற்குக் காரணமாயிருக்கின்றன.

சபையின் வருவாயைக் கூட்டுவதற்கு ஒவ்வொரு அங்கத்தவரும் ஊக்கங்கொள்ள வேண்டும். ஒவ்வொரு அங்கத்தவரும் சபையாரால் வெளியிடப்படும் புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் ஆதரித்துப் பிறரையும் அவைகளை ஆதரிக்கச் செய்ய வேண்டும். தாங்கள் செய்கின்ற அச்சுவேலைகளைச் சைவப்பிரகாச யந்திரசாலையிற் செய்ய வேண்டும். பிறரையும் அவ்வண்ணம் செய்யத் தூண்ட வேண்டும்.

(1-4-40—30-3-41) வரைக்குமுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையின் வரவுசெலவுக் கணக்கையும் புண்ணியகாச்சி தருமத்தின் வரவு செலவுக் கணக்கையும் சபையின் வரவுசெலவுக் கணக்கையும், பரிசோதித்து அவற்றின் அபிவிருத்திக்குரிய குறிப்புகளையும் அமைத்துச் சிறந்த அறிக்கைகளை எழுதி உதவிய சபையின் கௌரவ கணக்குப் பரிசோதகர் திருவாளர் அ. விசுவநாதன் B. A. அவர்களுக்கு எங்கள் சபையின் நன்றி உரித்தாகுக. இனிமேலும் இவ்வாறு எங்கள் சபையின் நன்னோக்கத்தைக்கருதி அப்பெரியார் அப்பணியை ஆற்றிவருவார் என நம்பியிருக்கின்றோம். எங்கள் சபையின் நன்மைக்காகக் காலந்தோறும் துணைபுரிந்து வருகின்ற அன்பர்களுக்கெல்லாம் மனமார்ந்த நன்றி கூறுகின்றோம்.

திருச்சிற்றம்பலம்

ஒருவருக்குச் சிறைத் தண்டனை

சென்னையிற் சத்தியாக்ரஹம்

சென்னை, ஆக 6 இன்று சென்னையிற் சத்தியாக்கிரஹம் செய்ததற்காக மேற்குக் கோதாவரி டிஸ்திரிக்கைச் சேர்ந்த கே. நாராயணராஜு என்பவருக்குப் பிரதம மாகாண நீதிபதி 4 மாதக் கடுங்காவற்றண்டனை விதித்தார். அவருக்கு "ஸி" வகுப்புக் கொடுக்கப்பட்டது.

கவியரசர் தாகூருக்குக் காந்திஜி புகழ்மாலை

உன்னத மகாகவி; உணர்ச்சிமிக்க தேசியவாதி

வைஸ்ராயின் ஆழ்ந்த வருத்தம்

கல்கத்தா, ஆக. 8—

கவிசிரேஷ்டர் டக்டர் ரவீந்திரநாததாகூர் காலமானதையொட்டி வைஸ்ராய் லின்லித்தோ பிரபு அனுப்பியுள்ள அநுதாபச் செய்தியைக் கவிசிரேட்டரின் புதல்வரான ஸ்ரீ. ரவீந்திரநாததாகூருக்கு வங்காளக்கவர்னர் அறிவித்துக்கொண்டார்.

வைஸ்ராயின் செய்தி வருமாறு:- தங்கள் தந்தை காலமாகி விட்டதையறிந்து நான் மிகவும் துக்கமடைந்தேன். மகத்தான உன்னத லட்சியங்களால் தூண்டப்பட்டு உற்சாகத்தோடு அவர் நீண்ட காலமாகச் செய்துவந்த சேவையின் அந்தம் இது. அவருடைய சேவை இனி வரும் எண்ணிறந்த தலைமுறைகளுக்குச் சிறந்த வழிகாட்டியாகவிருந்து உற்சாகமூட்டும்.

இயற்கையாக அமைந்த தமது அபூர்வ சக்திகளாலும் அருஞ்செயல்களாலும் அகில உலகிலும் இந்தியாவுக்குப் பெருங்கீர்த்தியைச் சம்பாதித்து அதன் மதிப்பை உயர்த்திய ஒருமகானைப் பாரதநாடு இப்பொழுது இழந்துவிட்டமை தாங்கொணாதிருக்கும் ஈடுசெய்ய முடியாத இக்கஷ்டத்துக்கு ஆழ்ந்த மனமார்ந்த அநுதாபத்தைத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

காந்திஜீ கூறியது

கவிதாகூரின் மரணம்பற்றித் தகவல் அறிந்ததும் மகாத்மா காந்தி சொன்னதாவது:—

இரவீந்திரநாத தாகூரின் மரணத்தால் ஒருமகாகவியை மாத்திரமல்லாமல் உத்வேக உணர்ச்சியுள்ள ஒரு தேசிய வாதியையும் நாம் இழந்துவிட்டோம்: பொதுவாக மானிட வர்க்கத்துக்கே அவர் அரிய தொண்டாற்றி வந்தார். எந்தப் பொதுவேலையிலும் அதிக சக்திவாய்ந்த அவருடைய செல்வாக்குக் கலவாமலிருந்ததில்லை.

உலகத்திற்கருளிய சொத்து

சாந்திநிகேதனமும் ஸ்ரீ. நிகேதனமும் இந்திய மக்களினுடைய மாத்திரமல்லாமல அகில உலகத்துக்குமே அவர் அருளிப் போந்துள்ள அரியசொத்தாகும் இம்மகானின் ஆத்மா சாந்தியடையுமாறு பிரார்த்திக்கின்றேன். சாந்தி நிகேதனத்தின் நிர்வாகஸ்தர்கள் அவர்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்பை நன்கு நிறைவேற்றி வைப்பார்களாக.

கனம் பஸ்லுல்ஹக்

கவியரசர் தாகூர் இக்காலச் சிறந்த கவிகளில் ஒருவர் என்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லையென்றும் அவருடைய மரணத்தால் வங்காளி இலக்கியத்திற்கு ஏற்பட்ட பெருங்கஷ்டம் அண்மையில் எங்ஙனம் ஈடு செய்யப்படுமென எதிர்பார்ப்பதற்கில்லையென்றும் வங்கப் பிரதமமந்திரி கனம் பஸ்லுல்ஹக் குறிப்பிட்டார்.

ஸேர். இராமசாமிமுதலியார்

இந்திய அரசாங்கத்தில் வர்த்தக அங்கத்தவர் ஸேர். ஏ. இராமசாமி முதலியார் கூறியதாவது:-

தாகூரின் மரணத்தாற் பொதுவாழ்வில் மாத்திரமல்ல இலக்கியம் தத்துவசாஸ்திரம் கலை ஆகிய துறைகளிலும் தலைசிறந்து விளங்கிய ஒரு மேதாவியை உலகம் இழந்துவிட்டது.

ஸேர். ராதாகிருஷ்ணன்

டக்டர் இரவீந்திர நாத தாகூர் கவின மறுமலர்ச்சியிற் பிரதானஸ்தானம் வகித்துவந்த மகாபுருஷர் கவிதாவுலகில் அவர் வால்மீகி காளிதாசர் இவர்களின் இனத்தைச் சேர்ந்தவரென்று ஸேர் இராதாகிருஷ்ணன் கூறினர்.

கவிதாகூரின் மரணத்தால் இந்தியா முழுவதுமே துக்கத்திலாழ்ந்திருக்கின்றது.

ஸ்ரீமதி சரோஜினிநாயுடு

கவிதாகூரின் சிறந்த விவேகமும் சௌந்தரியமும் கௌரவமும் கம்பீரமும் அன்பும் நிறைந்த அவருடைய வசீகரத் தோற்றம் ஆகிய இவை அவரை ஓர் அபூர்வ புருஷராக்கி விட்டன என்று ஸ்ரீமதி சரோஜினி நாயுடு கூறினர்.

மிஸ்டர். ஜேயக்கர்

கலையையும் நாகரிகத்தையும் மானிட வர்க்கத்திற்குப் போதிக்கத் தோன்றிய ஒருஆசானை இந்தியா இழந்து விட்டது. நாகரீக உலகமனைத்தும் இந்தியாவை அன்போடு நேசிக்கச்செய்தவர் இவரே என்று மிஸ்டர். ஜெயகர் கூறினர்.

வட்டுக்கோட்டை மலேறியா ஆரோக்கிய வார விழா

வட்டுக்கோட்டை சுகாதாரப் பரிசோதகர் திரு. ஸ். இராசரத்தினம் அவர்களின் பெருமுயற்சியால் 1941ம் ஆண்டு ஜூலை மீ 28-ந் திகதி முதல் ஐந்து நாட்கள் தொடர்பாக வட்டுக்கோட்டைச் சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஷை விழா ஆடம்பரமாக நடாத்தப்பட்டது.

அக்காலத்து டக்டர் சி. கந்தையா முதலியார் செ. சின்னத்தம்பி, வலிகாமம் மேற்கு மணியகாரன் திரு. பொ. நவரத்தினம் B. A., திரு K. A. செல்லையா B. S. C, வழக்கறிஞர் வே. நாகலிங்கம், வழக்கறிஞர் நா. ஏகாம்பரம், டக்டர் மிஸ். தில்லையம்பலம் M. A, மிஸ். முத்தையா B. A. என்னும் பிரமுகர்களால் முறையே குடல் நோய்கள், சுகாதாரமும் ஒழுக்கமும், நாட்டுச்சுகாதாரம், பண்டைக்காலத் தமிழரின் சுகாதாரம், உணவும் போஷிப்பும், சுகாதாரப் பொதுவிதிகள், நோயற்ற வாழ்வு, கருப்பவிதிகளையும் சிசுக்களையும் பேணும் முறை, தொற்றுநோய்கள் என்னும் விஷயங்கள்பற்றி அரிய பெரிய உபந்நியாசங்கள் செய்யப்பெற்றன.

கடைசிநாள் தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி ஆதாரபாடசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, மூளாய் அமெரிக்கமிஷன் பாடசாலை, வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை, வட்டு-திருஞானசம்பந்த வித்தியாசாலை; வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை, வட்டுக்கோட்டை கிழக்கு சைவத்தமிழ் வித்தியாசாலை மாணவர்கள் சுகாதார சம்பந்தமான சம்பாஷணைகள், நடனங்கள், ஆடல்பாடல்களால் சபையை மகிழச் செய்தனர்,

சுகாதாரப் பரிசோதகர் அவர்களால் வருவிக்கப்பெற்ற மாயாந்தக் காட்சி சனங்களுக்கு இன்றியமையாத அறிவுக்குரியதாயிருந்தது.

இவரால் அமைக்கப்பெற்ற சுகாதாரக் காட்சிச்சாலை பார்ப்பவர்களின் கண்ணையும் மனத்தையும் கவரக்கூடியதாக இருந்தது. நாடோறும் அப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் ஊரவர்களும் சென்று பார்வையிட்டுக் களிகூர்ந்தனர்.

இத்தினங்களில் ஷை பரிசோதகர் அவர்கள் பாடசாலை மாணவர் ஆசிரியர்களுடன் வீடுகள் தோறுஞ் சென்று மலசலகூடம், சுத்தம், வெக்கீர் உபயோகம், குப்பைக் கிடங்கு, வீட்டுக் கொல்லை என்னும் விஷயங்கள் சம்பந்தமாக அறிவுரைகள் புகட்டினர்.'

ஈற்றில் சுத்தத்தை விசேடமாகக் கைக்கொண்ட பாடசாலைகள் வீடுகள், நடைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பெற்றன. இவ்வாரம் முழுவதும் வட்டுக்கோட்டை அராலிப்பகுதிகளிலுள்ள வீடுகள், வீதிகள், பொதுஸ்தலங்கள் எவற்றிலும் சுகாதார மணமே வீசிக்கொண்டிருந்தன.

இப்பகுதிகளிலுள்ளார் அனைவருக்கும் இவ்வாரம் முழுவதும் போதனைகளாலும், சாதனைகளாலும், காட்சி வகைகளாலும் சுகாதார விஷயங்களையுணர்த்திய சுகாதாரப் பரிசோதகர் அவர்களுக்கு இவ்வூர்கள் என்றும் கடப்பாடுடையது.

தூரக்கீழ்ப் பிரதேசத்தில் யுத்தமேகம்

தாய்லந்து, ருஷியா, மலாயா, பர்மா, ஆதியன எதற்கும் ஆயத்தம்

வடக்கிலும் தெற்கிலும் ஜப்பானியப் படைகள் குவிகின்றன

லண்டன் ஆக 7

"தாய்லந்துக்குப் பேராபத்து ஏற்பட்டிருக்கின்றதென்பதிற் சந்தேகமில்லை" என்று லண்டனிலுள்ள விஷயந் தெரிந்த வட்டாரங்களிற் கூறப்படுகிறது. இது பற்றிய செய்திகள் இன்று லண்டன் மாலைப் பத்திரிகையில் நீண்ட தலைப்புக்களுடன் பெரிய எழுத்துக்களிற் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

ஈவினிங் ஸ்டாண்டேட் அச்செய்கைகளைப் பின்வருந் தலைப்புக்களுடன் வெளியிட்டது:-

"ஜப்பான் தாய்லந்தையும் விளாடிவாஸ்டாக்கையும் பயமுறுத்துகிறது. சோவியத்தின 10 லக்ஷம் சிறந்த துருப்புகள் தயாராக இருக்கின்றன. மஞ்சுகோவில் ஜப்பான் தனது படைகளைக் கொண்டுவந்து குவிக்கின்றது."

'முழுப்பலத்தோடு தாய்லந்து எதிர்க்கும்'

"ஈவினிங் நியூஸின் தலைப்புக்களின் விபரம் வருமாறு:-

விளாடிவாஸ்டாக்கிலிருந்து 100 மைல தூரத்துக்குள் ஜப்பான் ஏராளமான துருப்புகளைக் கொண்டு குவிக்கிறது. சியாமின் நிலைமை அபாயகரமானதாக இருக்கிறது."

தூரக்கிழ்ப் பிரதேசத்தில் எக்கிஷணத்திலும் யுத்தம் ஏற்படலாம் என்று டோக்கியோ ரேடியோ வெளியிட்ட செய்திக்கும் அப்பத்திரிகை முக்கியத்துவம் அளித்திருக்கிறது.

யுத்த நிலைமைபற்றி இன்று லண்டனிலுள்ள விஷயந் தெரிந்த வட்டாரங்களிற் பின்வரும் அபிப்பிராயந் தெரிவிக்கப்பட்டது. "ஹார்பின் நகருக்கும் கொரியாவின் வடக்கு எல்லைப் புறத்துக்குமிடையே ஜப்பானியர் யுத்தஞ் செய்யக்கூடிய ஏராளமான துருப்புக்களைக் கொண்டு போய்க் குவித்து வருவதாகச் செய்திகள் எட்டி வருகின்றன. கொரியாவின் வடக்கு எல்லைப்புறம் விளாடிவாஸ்டாக்கிலிருந்து 100 மைல் தூரத்திற்றானிருக்கிறது. இந்தோ சீனாவில் ஜப்பானியத் துருப்புகள் தாய்லந்தின் தலைநகரான பாங்காக்குக்கு 250 மைல் தூரத்திலுள்ள சிம்ரீப் நகரைக் கைப்பற்றிக் கொண்டு விட்டன. ஜப்பான் இராணுவ நடவடிக்கை எடுத்துக் கொண்டால் தாய்லந்து முழுப்பலத்தோடு அதை எதிர்க்குமென்று லண்டனிற் கருதப்படுகிறது.

வடக்கிலும் ஜப்பானின் ஆயத்தம்

மஞ்சுகோவிலும் வட கொரியாவிலும் 2,50,000 ஜப்பானியத் துருப்புகளை வைக்கப்பட்டிருந்தன. சென்ற சில வாரங்களில் ஜப்பானியர் அப்பிரதேசங்களுக்கு ஏராளமான புதிய துருப்புகளை அனுப்பி ஆங்காங்குள்ள படை பலத்தை அதிகரித்திருக்கின்றனர். ஜப்பானியர் அதிக பாதுகாப்புத் தளங்களைத் தயாரித்து வருகிறார்களென்பதற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன. ஆர்தர் துறைமுகம், டைரன் நகர் ஆகியவை மூலமாக மஞ்சுகோவிலும் கொரியாவிலுமுள்ள தங்கள் இராணுவங்களைப் பலப்படுத்திக் கொள்வதில் ஜப்பானுக்கு எவ்வித கஷ்டமும் இருக்காது. சைபீரியாவிலுள்ள ருஷிய இராணுவம் மிகவும் பலம் பொருந்தியதாகவிருக்கிறதென்று குறிப்பிடப்படுகிறது.

தூரக்கீழ்ப் பிரதேச ருஷிய ராணுவம்

தூரக்கீழ்ப்பிரதேச ருஷிய இராணுவத்தில் மொத்தம் 10 லக்ஷம் துருப்புகளிருக்கின்றன. இத்துருப்புகள் சிறந்த முறையிற் பயிற்சி பெற்றவைகளாகும். இவைகளின் ஜெனரல்களும் திறமைவாய்ந்தவர்களாவர். ஜப்பான் தனது துருப்புக்களிற் பெரும் பாகத்தைச் சீனாவில் வைத்திருக்கிறது. இது ஜப்பானுக்குள்ள பிரதிகூலமாகும். ஜப்பானியர் இந்தோ—சீனாவில் 50,000 துருப்புகளை இறக்கினர். இத்துருப்புகள் அங்குள்ள 8 விமானத் தளங்களைக் கைப்பற்றி இருக்கின்றன. தாய்லந்து இராணுவத்தில் மொத்தம் 50,000 துருப்புக்கள் இருக்கின்றன. தாய்லந்து இராணுவத்திடம் போதிய யுத்தத் தளவாடங்களில்லை. ஆயின், தாய்லந்து விமானப்படை மிகவும் திறமையானதாக இருக்கிறது.

ஜப்பான் சிங்கப்பூரைத் தாக்க முயற்சிக்குமானல் ஜப்பானின் மூலபலம் பெரிதும் பாதிக்கப்படும். என்று இங்குவற்புறுத்தப்படுகிறது. சிங்கப்பூரைப் பலப்படுத்துவதற்கு ஏராளமான பணம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. சிங்கப்பூரிலுள்ள பிருத்தானிய விமானப் படையைவிடச் சிறந்ததாக விருக்கிறது. அண்மையிற்கூட, பிருத்தானியவிமானப்படை மேற்கொண்டும் பலப்படுத்தப்பட்டது. மலாய் இளவரசர்கள் தங்கள் நாட்டைப் பாதுகாக்கும் திட்டங்களிற் குதூகலமாக ஒத்துழைத்து வருகிறார்கள்.

பர்மாவும் ஆயத்தம்

பர்மா எவ்வித தாக்குதலையும் முறியடிக்கக்கூடிய பலத்தோடு இப்பொழுது விளங்குகிறது.

ஜப்பானுக்கு விடுத்த எச்சரிக்கையைப் பற்றிப் பிரஸ்தாபம்

நேற்று மிஸ்டர் ஈடனும் மிஸ்டர் கார்டல் ஹல்லும் ஜப்பானுக்கு விடுத்த எச்சரிக்கை பற்றி ஜப்பானிய அதிகாரியொருவர் இன்னும் பிரஸ்தாபித்தாரென்று அறிவிக்கப்படுகிறது. அந்த எச்சரிக்கைகள் அச்சந்தர்ப்பமானவை யென்றும் பிருத்தானியரும் அமெரிக்கர்களும் ஒன்றுசேர்ந்து அவற்றைச் சிருஷ்டி செய்திருக்கின்றனரென்றும் அவர் விவரித்தார்.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை

மலேறியா வாரப் பெற்றுர் தின விழா

நிகழும் விஷு வருஷம் ஆடித் திங்கள் 22-ம் நாள் (6-8-41) புதன்கிழமை பிற்பகல் 6-30 மணி தொடக்கம் ஷை விழா அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மண்டபம் முன்றிலும் மகரதோரணங்களாலும், புஷ்பமாலைகள், வாழைகள், கரும்புகளாலும் அதி கவர்ச்சிக்குரியதாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்வமையம் தலைவர் கனம் A. J. R. வேதவனம் வடபெரும்பாக வித்தியாதரிசி அவர்களும் வடபகுதிச் சுகாதாரப் பகுதித் தலைவர் கனம் S. C. துரைராசா அவர்களும் முன்றிலிலிருந்து மாலையிடப்பட்டு மாணவர்கள் கொடிதாங்கிய கைகளுடன் இருமருங்கிலும் நின்று வணக்கஞ் செய்யவும் பன்னூற்றுக்கணக்கான சபையோர் வணக்கஞ் செய்யவும், நவரத்தினதவிசோ டொத்த நவீன அலங்கார மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது தம் தலைவர் சுகாதாரப் பகுதித் தலைவர் சபையோர்களுக்கு முறையே பரவசமூட்டும் உணர்ச்சியும் உண்மைகளும் பொதிந்த யாதஜேனுபசாரப் பாட்டுக்கள் படித்துக் கொடுக்கப்பட்டன.

பின், தலைவர் அவர்கள் சுகாதார சம்பந்தமாக நகைச்சுவை ததும்பவும் உணர்ச்சி ததும்பவும் சுடலமடை திறந்தாலொப்ப அரியவோர் சொற்பொழிவாற்றிச் செவிக்கமிழ்தம் ஊட்டினர். பின்னர்ச் சுகாதாரப் பகுதித் தலைவர் அவர்கள் மலகூடம், வெக்கீர் பாவித்தல் என்பவற்றின் அவசியத்தைப்பற்றிச் சுவர்ச்சி நகைச்சுவை, உணர்ச்சி என்னும் சுவைகள் பொருந்த அரிய சொற்பொழிவாற்றினர் சுகாதார விஷயங்களில் அதிகம் தொடர்பு படுபவர்கள் பெண்களே யென்றும் அதனுள் பெண்கள் தான் முக்கிய கவனஞ் செலுத்தித் தம்பிள்ளைகளின் சேமலாபத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும், உலகம் அவர்களாலேயே கடைத்தேற வேண்டுமென்றும் பல திருஷ்டாந்தங்கள் மூலம் எடுத்துக் காட்டினர். பின்பு பின்வரும் விஷயங்களை மாணவர்கள் திறமையுடன் நடித்துக் காண்பித்தனர் 1. திருப்புகழ் 2. சம்பாஷணை (மலேறியாக் காய்ச்சல்) 3. சுப்பிரமணியர் நடனம் 4. வியாசம் (மலேறியா) 5. கீர்த்தனம் (மலேறியா) 6. நளம்பரசர் மகாராஜ 7. சம்பாஷணை (அம்மைப்பால் குத்தல்) 8. கும்மி (தனித்த சுகாதாரம்) 9. கோலாட்டம் (நித்திய கருமம்) 10. மாதிரி வைத்தியசாலை என்பன. முடிவில் தலைவர் பாடசாலையின் காட்சியும் ஆசிரியவேலைகளும் தம்மகத்தைவிட் டொருபொழுது மகலாதென்றும் இவ்விதம் திருப்தி தரும்படி ஊக்கத்துடன் செய்து முடித்த ஆசிரியர் மாணவர் பெற்றோர் எல்லோர்க்கும் தம் மனமார்ந்த நன்றியைச் செலுத்துவதாகவும் கூறி முடித்தார். பின் நன்றிகூறல், தேவாரம் என்பவற்றுடன் கூட்டம் இரவு 10½ மணியளவில் இனிது கலைந்தது. தலைவர் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் விளையாட்டிடத்தையும் யாழ்ப்பாணத்தில் சிறந்த நூல்நிலையங்களுள் ஒன்றாக கருதப்படும் சிறந்த பாடசாலை நூல் நிலையத்தையும் பாடசாலைத்தோட்டத்தையும் தரிசித்து அகமகிழ் வெய்தினர்.

சி. செம்பரப்பிள்ளை.
ஷை பாடசாலைத் தலைமையாசிரியர்
வட்டுக்கோட்டை.
7. 8. 41.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

53வது வருடாந்தக்கூட்டம்

இம்மாதம் 9ந் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் 53 வது வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. அ. தில்லையம்பலம் தலைமைவகித்தார்.

தேவாரபாராயணத்தோடு கூட்டம் ஆரம்பமாயிற்று. சென்றதிருவாக்கூட்ட அறிக்கையும் சென்ற வருடாந்த மகாசபையின் அறிக்கையும் வாசிக்கப்பட்டுச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டன.

காரியதரிசி திரு. மு. மயில்வாகனம் தாது முதல்வருட அறிக்கையை வாசித்தார். அது சபையாரால் அங்கீகரிக்கப்பட்டது.

தனாதிகாரியின் கணக்கு விபரங்களும் கணக்குப் பரிசோதகரின் அறிக்கையும் வாசித்துச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டன.

இவ்வருடத்திற்குப்பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டனர்:-

தலைவர்: திரு. அ. தில்லையம்பலம்

உபதலைவர்கள்: திரு. இ. சிவகுருநாதர், திரு. C. அருனம்பலம்

காரியதரிசி: திரு. மு. மயில்வாகனம்

உபகாரியதரிசி: திரு. K. S. சுப்பிரமணியம்

தனாதிகாரி: S. பசுபதிச்செட்டியார்

நிர்வாகசபை அங்கத்தவர்கள்: முதலியார் P. இராஜகோபால், முதலியார் S. செல்லப்பா, டக்டர் S. துரைப்பா, டக்டர் C. சிவசிதம்பரம், திருவாளர்கள் S. இராசரத்தினம், V. நாகலிங்கம், T. முத்துச்சாமிப்பிள்ளை, E. கதிரவேலு, S.T.M.P. சிதம்பரநாதச் செட்டியார்: A. செல்லப்பா, K. ஐயாத்துரை V. சிசுவலிங்கம், V. T. சம்பந்தன் T. N. சுப்பையா, K. நவரத்தினம், S. ஆண்டூபக்ஷ, A. V. குலசிங்கம், V. M. சரவணமுத்து, K. இராமலிங்கம், P.சின்னத்துரை.

கணக்குப்பரிசோதகர்: திரு. வ. விசுவநாதன்

அத்வக்காத் திரு. A. V. குலசிங்கம் ஆங்கில இந்துசாதனப் பத்திரிகைக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

கவீந்திரர் டக்டர் இரவீந்திரநாத தாகூர் அவர்களின் தேகவியோகத்தைக் குறித்துச் சபையில் அநுதாபப் பிரேரணையொன்று நிறைவேற்றியது.

தேவாரபாராயணத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

மேலும் சில யுத்தக் கைதிகள்

பூசாவுக்கு அனுப்பப்பட்டனர்

கொழும்பு, ஆக, 10 உ

இங்கு அழைத்து வரப்பட்ட இத்தாலிய யுத்தக் கைதிகளின் மற்றொரு கோஷ்டியை நேற்று முன் தினம் விசேஷ புகைவண்டியின் மூலம் பூசாவில் உள்ள யுத்தக் கைதிகள் முகாமிற்கு அதிகாரிகள் அனுப்பிவிட்டார்கள். சென்ற வியாழக்கிழமையும் குறித்த முகாமிற்கு இத்தாலிய யுத்தக் கைதிகள் அழைத்துக் கொண்டு போகப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

விளம்பரம்

[illegible] 1941ம் ஆண்டு [illegible]

G. de. Sovza,
[illegible]
கொழும்பு, ஆவணி மீ 5உ 1941ம் ஆ.
(G. 18. 11.8.41)

கவி தாகூரின் கடைசித் தரிசனம்

கல்கத்தா மக்கள் திரண்டு வந்தனர்

வழிநீளம் மலர்மாரி பெய்யப்பட்டது

கல்கத்தா, ஆக' 8 உ

கவிதாகூர் இறந்த செய்தி நேற்றுக் கல்கத்தா சோப்பம பகல் 12-13 மணிக்கு அவருடைய அறையினின்றும் கிடைத்தது. உடனே தங்கு கூடியிருந்த அனைவருந் துக்கத்தை அடக்கமுடியாமல் விம்மி அழ ஆரம்பித்தனர். அறையின் கதவு திறக்கப்பட்டவுடன் வெளியே கண்ணீர்ப்பெருக்குடன் நின்ற ஆடவரும் பெண்டிரும் தமது ஒப்பற்ற தலைவருக்குக்கடைசி வணக்கம் செலுத்துவதற்காக அறைக்குள் நுழைந்தனர்.

அங்கு கவியரசரின் உடல் ஒரு கட்டிலின்மீது பச்சைப்பட்டினும் போர்த்தப்பட்டுச் சாய்த்த நிலையில் இருந்தது.

தாகூரின் மரணச்செய்தி நகரெங்கும் காட்டுத் தீயைப்போற் பரவியது. ஜனங்கள் கடலெனத் திரண்டுவந்து கூடினர்.

கவியரசரின் கடைசி அவா

வெள்ளிக்கிழமையன்று தான் கவியரசர் கடைசியாகப் பேசினராம். அப்பொழுது கீர்த்திபெற்ற ஓவியக்காரரான மிஸ்டர் அவநீந்திரநாத தாகூரின் 70 வது பிறந்த தினத்தை வங்காளம் நன்கு கொண்டாட வேண்டும் என்றதன் பேரவாவைத் தெரிவித்தாராம்.

கல்கத்தாவில் ஹூக்ளி நதிக்கரையிற் கவியரசரின் முன்னோர்களின் ஈமக்கிரியைகள் நடந்த இடமான நிம்தோலாமயானத்திலேயே அவருடைய ஈமக்கிரியைகளையும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தகனக்கிரியைகள் மயானத்தைச் சேர்ந்த ஒதுக்கான இடத்தில் நடைபெறும்.

கவியரசரின் பூதவுடல் ஊர்வலமாக வெளியே எடுத்து வரப்படுமுன் அவருடைய ஆன்மா சாந்தியடைய வேதபாராயணங்களும் பிரார்த்தனையும் நடந்தன. ஊர்வலம் மயானத்தை அடையுமுன்னர் எல்லாவிடங்களிலும் ஜனத்திரள் கூடிவிட்டது. ஆகவே ஊர்வலம் இரண்டுமைல் செல்லுவதற்கு இரண்டு மணிநேரம் சென்றது. வழிநீளம் பிரேதத்தின்மேல் ரோஜாமலர்களும் வறுத்த அரிசியும் தூவப்பட்டதோடு பன்னீரும் தெளிக்கப்பட்டது. மலர்ச்செண்டுகளும் வைக்கப்பட்டன.

வாணிக உலகு

வாழ்க்கையில் மனிதன் செய்து முடிக்கும் கருமங்கள் மூன்று வகைப்படுகின்றன. 1 தன் கடமைகளைச் செய்து முடித்தல் 2 அவைகளில் தன் பாத்தியதையை ஸ்திரப்படுத்தல் 3 தன் சீவியமுடைகளுக்கு அவசியமாகும் சாதனங்களைச் சேகரித்துக் கொள்ளுதல்.

2 மேற்கண்ட அம்சங்களை விஸ்தாரமாகக் கூறுவதே அர்த்த விநியோக சாத்திரம (Economics) அது இரு பிரிவுகளைக் கொள்ளும் 1 ராசநீதிமுறை (Political Economy) 2 கிரகஸ்தாசிரமுறை (DomesticorSocial Economy)

3 ஒரு நாடு கனப் பெருக்கைக கொண்டு செழிப்புடன் முன்னேறுவதற்கு அனுகூலங்களான வரி குளம் பல ப்போக்குவரத்து வசதிகள் வியாபாரக் கோட்பாடுகள் முதலியவைகளை நிர்ணயித்து அமுல் நடத்தி வருவது ராசநீதி முறையைச் சார்ந்தது. சனசமூகங்களின் ஆரோக்கியம் ஆசாரம் சீவியத்திற்கு தேவைப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்களைச் சேகரிக்கும் வழிவகை முதலானவைகளை விவரப்படுத்திக் கூறுதல் இவைகளை கிரகஸ்தாசிரமத்திற்குரியன.

4 பின் கூறியிருக்கும் உதாரணமானது அர்த்த விநியோக சாத்திரத்தின் லட்சியத்தையும் நுட்பத்தையும் தெளிவாகக் காட்டும்.

மனித உடலின் ஒவ்வொரு அவயத்திற்குமஇயற்கையேபுறமபான ஒரு வேலை (labour) ஏற்பட்டிருக்கிறது. அவை தங்களுக்குரிய வேலைகளை முடித்து அதன் பின் வஸ்துக்களை வேறு அவயவங்களுக்கு மாறிக்கொள்ளுகின்றன. (Exchange) சில சமயம் ஏதேனுமொரு அவயவம் அதிக வேலையைச் செய்ய நேர்ந்த போதிலும் அதற்குத் தேவைப்பட்டதை மற்ற அவயவங்கள் கிரடிக் கொடுக்கு மேலும் நம்பிக்கை (Credit) அவயவங்களுக்குள் ஏற்பட்டிருக்கிறது.

5 அர்த்த விநியோக சாத்திரத்தின் அங்கங்கள் மூன்று 1 பண்டங்களின் உற்பத்தி (Production) 2 அவைகளை வேறு தலங்களுக்குப் பரவச் செய்தல (Circulation and Distribution) 3 அவைகளை உபயோகித்துச் செலவுசெய்தல் (Consumption)

II

மனிதனின் ஆசைக்கும் தேவைக்கும் அளவில்லை. ஆதியில் அவனுக்கேற்பட்டிருந்தவை சிலவே. அந்நிய நாட்டாரின் பழக்க வழக்கங்களைக்கொண்டு தன் சீவிய முறைகளை அதிகப்படுத்திக்கொண்டான் மேலும் அவன் முன்னேர் அறியாதன சேவைகளையும் உண்டாக்கிக் கொண்டான்.

2 முதன் முதலாக மனிதனுக்கேற்பட்டிருந்தது ஆகாரமுடையே. அதைத்தொடர்ந்து பிறந்தது அலங்காரம். அதாவது ஆடை ஆபரணங்களை அணிந்து தன்னை அழகு செய்து கொள்ளுவது.

3 பூமியிலிருந்து உண்டாகும் யாவும் மனிதனின் முடைகளைத் தீர்ப்பவையே

4. ஒரு பண்டமானது சீவிய முடையைத் நீக்கவல்லதா (Utility) என நிர்மானிக்கக் குறித்த பண்டமானது இரண்டு குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். (i) சீவிய முடைக்கு அப்பண்டம் பொருத்தமுள்ளதாயுமிருக்க வேண்டும். உதாரணமாக நவரத்தினத்தை இச்சிக்கிறுவென்றால் அதன் தாத்தியால் பிறமை கொள்ளுகிருன். தங்கத்தை இச்சிப்பது அதனிலுள்ள பளபளப்பிற்காக (ii) குறித்த பண்டம் சீவிய முடைக்குப் பாவிக்கக்கூடிய வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

5. மனிதன் பண்டங்களைத் தன் முடைகளுக் கேற்றவாறு வகைப்படுத்திக் கொள்ளுகிறன்.

சிலவற்றை விசேடமாகவும் சிலவற்றை மத்திமமாகவும் மற்றும் சிலவற்றை அதமமாகவும் கருதுகிறன். இவ்வாறு செய்வதிலிருந்து தான் ஒவ்வொன்றிற்கும் மதிப்பு (Value) உண்டானது.

உதாரணமாகத் தண்ணீர் (1) அருந்தப்படுகிறது. (2) பயிர்களுக்கும் விருட்சங்களுக்கும் பாய்ச்சப்படுகிறது. (3) பல இயந்திரக் கருவிகள் உபயோகப்படுத்துகின்றன.

ஆனதால் மேற்கூறிய ஒவ்வொரு வகைக்கும் ஒரு மதிப்பு ஏற்படுகிறது.

III

பண்டங்களின் உற்பத்திக்கு ஆதாரமானவை:- (1) பூமி (And) (2) தேகப்பிரயாசை (labour) (3) மூலதனம் (Capital)

2 பண்டங்களின் உற்பத்திக்கு இயற்கைப்பொருள்களும் தொழிற் சாதனங்களும் அவசியமாகின்றன. இவை ஓர் அளவிற்கு நியமத்திற்கும் கட்டுப்பட்டவை.

உதாரணமாகப் பூரம் குறைந்தால் இயற்கைப் பொருள்களும் செயற்கைப் பொருள்களும் (அதாவது பண்டங்களின் உற்பத்தி) குறையும்.

2 இயற்கைப் பொருள்களோடு கைத்தொழிலும் சேருவதின் பயனே பண்டங்களின் உற்பத்தி இதில் பல இடையூறுகளேற்படுகின்றன அவைகளை நீக்கக் கருவிகள் தேடிக் கொள்ளப்படுகின்றன.

(தொடரும்)

புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

குடி இயல் நூல்

இலங்கை
வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.
(அங்கீகார இலக்கம். $\frac{21 A \& B}{41}$ திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)

பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும, வண்ணார்பண்ணை-காவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய **திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள்** மேற்படி பரீட்சைக்குக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும்
தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம் }
20-8-40 }
மனேஜர்.

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா [illegible]
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி

சகல சீட்டுத விளம்பரங்கள் விசேட விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் சேர்ந்து கடிதமூலம் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யாவிடின் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

பத்திரக்கிரயம்

அரையாண்டு ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லைக்குள் தமிழ் ரூபா 5-00 இங்கிலீசும் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இங்கிலீசும் தமிழும் 12-00
தொடுவாய்ப் பகுதி 9-00 இங்கிலீசும் தமிழும் 13-00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

தேசியஜீவன்

1-ம் பக்கத் தொடர்ச்சி

தாயஜீவன் அரசியலில் தன்னை வெளிப்படுத்திக் கொள்வது இன்றியமையாததாய் விடவே, அது திடமெவ வங்க இலக்கியமும் தன் மூலாம்சமான சநாதன ஜீவனை மீண்டும் பெறுமாறு தூண்டியது. கடந்த சமீபகாலத்தில தேசிய கீதங்களின் தான் இந்தச் சுபாநுபவம் ஏற்பட்டது. உள்ள எழுச்சிகளும் உணர்ச்சிகளும் தனிப் பாடல்களாகப் பரிணமிப்பது; ஆழ்ந்த, தீவிரமான கோமையான உள்ளக்கொழுச்சியும், கட்டற்ற, விழுமிய உற்சாகமும், சாமான்னியமாகவும் உருவமாகவும் வெளிப்படுவது; இனிமையும் வலிமையும் கலந்த அன்பையும் பக்தியையும் பிரசாவமாக வெளிப்படுத்துவது; ஒளிபெற்ற உள்ளம் மேலோங்கயுள்ள சக்திவாய்ந்த அறிவு; ஆத்மீக நிலையின் உயர்வையடையும் உணர்ச்சியும் ஆத்மீக விழிப்பும் தெளிவான உலகாநுபவங்களாக மிளிர்வது — இவையே வங்க ஜீவனின் சிறப்பியல்புகள். நமது இலக்கிய மெல்லாம் ஜீவனுடன் துடிக்கும் பொருட்டு இந்த அடிப்படையிலிருந்தே நிலைப வேண்டும். அது எத்தகைய வேறுபாடுகள் கொள்ள விரும்பினும், இதன் தொடர்பை இழந்துவிடலாகாது.

மீண்டும் வங்காளத்தில் தான், தேசிய ஜீவன் கல்வியில் தன்னை நிறைவேற்றிக் கொள்ளுகின்றது. மொகலாயரின் வீழ்ச்சிக்குப் பின் அங்கேதான் முதன் முதலாக ஒரு புதிய தேசியக் கல்வியின் சம்பிரதாயம் வளர்ந்துவருகின்றது. அதற்கு அஸ்திவாரம் போட்டவர் ரவீந்திர நாத்தாகூர். அவரே அதன் ஆசாரியருமாவார். அவர் தொடக்கத்தில் அன்னிய, ஆசியக் கல்வியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தாராதலால், அது இன்னும் அவ்வாதிக்கத்தினை ஒழிப்பமடைந்தும், புறத்திலிருந்து வருவதைப் போன்ற ஒருவித தோற்றமுடையதாயும் இருக்கின்றது. சமுதாயஜீவன் தற்காலிகமான இந்த ஆதிக்கத்தினின்று வற்கெனவே விடுவித்துக் கொண்டு வளர்ச்சியடைந்தும் வருவதைக் காணக் கூடும். இதிலும் வங்கஜீவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு வருகின்றது.

நவசக்தி

விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சித்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், பாவகிலை முதலிய கணித வகைகளும், மகாதசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசாரபலன், காலசக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7-41—19-7-42

வட இலங்கைச் சங்கீத சபை

வேனிற் காலச் சங்கீதப் பாடசாலை இவ்வருஷம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆகஸ்டு மீ 16-ந்திகதி தொடக்கம் செப்டம்பர் மீ 6-ந் திகதி வரை நடக்கும்.

சம்பளம் முதலிலேயே கொடுக்கப்படுதல் வேண்டும்.

வயதின் எல்லா வகுப்புகளும் ரூ 8
வாய்ப்பாட்டு வயதடைந்தவர்கள் ரூ 4
சிறுவர்களுக்கு ரூ 3

A. J. R. வேதவனம்,
வடபிரிவு வித்தியாதரிசி
தலைவர், வ. இ. ச. சபை
Mis 80 4. 14. 8. 41.

தமிழ் இலக்கிய மகாநாட்டுத் தலைமையுரை

1-ம் பக்கத்தொடர்ச்சி

சரித்திர விஷயமே. மதுரையில் நிகழ்ந்த இச்சமய வெற்றியால் சமயக் கல்வியும சமய இலக்கியங்களும வளர்ந்து செழித்தன. இத்திருநகரின் சரிதத்தோடு மீண்டும் தமிழ்க் கல்வி முதலியன தொடர்புற்றுப் பெருகலாயின.

ஆனால் சைன சமயம் முற்றும் அழிந்துவிடவில்லை. அரசியற் செல்வாக்கை யிழந்தது உண்மை. இதனை ஒரு நன்மையென்றே சொல்ல வேண்டும். ஏனெனின் அச்சமயம் பிறவழிகளிலே பேருழைப்பு எடுத்து வந்தது. சிறந்த தமிழிலக்கியங்களையும் இலக்கணங்களையும் இயற்றி அவற்றின் மூலமாகத் தமிழ்மக்கள் இதயத்தைக் கொள்ளை கொள்ள முயன்றது. சூளாமணி யென்ற தலைசிறந்த காவியம் இக்கணம் தோன்றியதேயாகும்.

“சமண புரைக்குங் குறையென்
னினும் சமணவென் வேற
நேமா ணலகைத் திருமானொடுஞ்
சேர்த்த னென்னுக
அமரன் தமிழின் கிழவன்சுட
ராச யாப்பிற
கோபா னவையுட் டெருண்டார்
கொளப் பட்ட தன்றே”

இச்செய்யுளில் ‘தமிழின் கிழவன்’ எனச் சேந்தன் விசேடிக்கப்படுதல் காணலாம். பாண்டியனுக்கே இவ் அடைமொழி யுரியதாதல் அவனுக்குரிய ‘தமிழ் நாடன்’ என்னும் திவாகரப் பெயரால் அறியலாம். ஆதலால், சூளாமணிக் காவியமும பாண்டியனவைக்களத்து அரங்கேற்றப்பட்டமை உணரக் கிடக்கின்றது. இங்ஙனமே சீவகசிந்தாமணி யென்னும் பெருங்காப்பியமும் இம்மதுரை மூதூரோடு தொடர்புடையதாகும். இதனை ஜைனர்கள் இப்பெருங் காப்பியத்தைக் குறித்து வழங்கும் வரலாற்றினால் தெளியப்படுகின்றது. ஆசிரியர் திருத்தக்க தேவர் சோழர் குலத்துதித்தவரே யெனினும், பாண்டிவள நாட்டிலுள்ள மதுராபுரியை அடைந்து, அங்குள்ள சங்கப் புலவர்களோடு அளவளாவியிருந்து அவர்கள் கருத்துப்படியே சிந்தாமணியையியற்றி அவர்கள் திருமுன்பில அரங்கேற்றினரென்ப. இச்சங்கம் கடைச்சங்கமன்று; நீண்ட காலத்திற்குப் பின்னிருந்த ஒரு சங்கமென்று கொள்ளுதல் வேண்டும். மதுரைக்குப் பெரும் புகழ் விளைத்து அப்புகழ் எங்கும் பரிமளிக்குமாறு செய்த ‘தமிழ்ச் சங்கம்’ மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்று, புதிய புதிய நோக்கத்துடனும் புதிய புதிய கோலத்துடனும் தமிழ்மொழியையும் தமிழிலக்கியத்தையும் பேணிப் போற்றி வந்துளதென்பது இப்பிற்கால சங்கமும் நமக்கு நன்கு புலப்படுத்துகின்றது.

மதுரையில் நிகழ்ந்த சமய வெற்றியால் சமய நூல்கள் பெருகின வென்று முன்னர்க் கூறினேன். இச்சமய நூல்களை நான்கு பெரும் பிரிவாக அமைக்கலாம். முதலாவது பக்தி நூல்கள். இந்தப் பக்தி நூல்கள் சம்பந்தமூர்த்திகளது காலத்திற்குச் சிறிது முன்புதானே தோன்றத் தொடங்கிய போதிலும், அவரது சமய வெற்றிக்குப் பின்னரே உரம்பெற்றுத் தழைத்தோங்கலாயின. தமிழ் நாட்டில பக்த பாரம்பரையையும் பக்திநூற் பாரம்பரையையும் உற்பத்தி செய்ததும் இச் சமய வெற்றியே யென்றுதான் கொள்ளவேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், ஒன்பது முதலிய திருமுறைகளைப் பாடிய திருஅடியார்கள் முதலியோர்களும், ஆழ்வார்களும் இந்தப் பக்த பாரம்பரையிலுள்ளவர்களே. இவர்கள் அருளிச் செய்த தெய்வப்பாடல்களே பக்தி நூற் பாரம்பரைக்குப் பெருமையும் புகழும் அளித்திருக்கின்றன.

இரண்டாவதாக, சமய சாஸ்திரங்களைக் கூறுதல் வேண்டும். பக்தியாலெழுந்த திருவாக்குக்களுக்குச் சாஸ்திர சம்பந்தமான பொருள் வேண்டும்; பக்தியாலெழுந்த திருவாக்குகளுக்குச் சாஸ்திர சம்பந்தமான பொருள் வேண்டும்; அன்றியும் சமயங்களும் சாஸ்திர மூலமாகத் தருக்கித்து நிறுவப்படவேண்டுமே. இக்காரணங்களால் பற்பல சமய சாஸ்திரங்கள் தமிழில் தோன்றின. மூன்றாவதாக, [illegible] இலங்கிய மூலதன [illegible] பாரதம், இராமாயணம் என்ற இதிகாசங்களின் வழித் தோன்றிய தமிழ் நூல்களைக் கூறவேண்டும். இவைகள் ஏற்கெனவே சங்கச் சான்றோர்களால் இயற்றப்பட்டன வென்று கொள்ளுதற்குச் சில சான்றுகள் உள்ளன. ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும்’ என்பது சின்னமனூர்ச் சாசனத் தொடர். சங்க காலத்து இராமாயணத்தைச் சார்ந்தனவாகக் கொள்ளக்கூடிய சில செய்யுட்கள் பழையவுரைகளால் தெரிய வருகின்றன. ஆனால் இந்நூல்கள் இப்போது மறைந்துவிட்டன. சமயவுணர்ச்சி மிகுந்து பரந்த தமிழ்நாடு முழுதும் அலைமேல் அலையாக மோதியடித்தெழுந்த காலத்தே அவ்வுணர்ச்சி வேகத்தால் தோன்றிய நூல்களைப் போல, இவைகளால் தமிழ்மக்களை வசீகரிக்க முடியவில்லை. இக் குறைபாட்டினாலேயே இவை வழக்கொழிந்துபோயிருக்கலாம். கல்வி மாட்சியும் அறிவின்மாட்சியும் உணர்வுமாட்சியும் உணவுமத தமிழ் மாபுணர்ச்சியும் ஈடும் எடுப்புமற்ற கவிதாசக்தியும வாய்ந்தவர் கம்பர். இவர் இயற்றிய இராமாவதாரமே உணரத் தெவிட்டாத தெள்ளமிர்தமாக வுள்ளது. இது தமிழ் நாட்டிற் பரந்து பெருகிய பக்தியாற் பிறந்த தென்பது,

“படிகொண்ட கீர்த்தி யிராமாயண
மெனனும் பத்தி வெள்ளம்”

என்ற இராமாநுஜ நூற்றந்தாதியில் வரும அடியினால் உணரலாகும். நான்காவதாக, அடியார்களைக் குறித்தும புண்ணிய ஸ்தலங்களைக் குறித்தும் எழுந்த புராணங்களைக் கூறுதல வேண்டும். அடியார்களைக் குறித்தெழுந்த நூல்களுள், திருத்தொண்டர்புராணம் என்னும் பெரிய புராணத்தையும் குருபரம்பரைகளையும் கூறலாம். புண்ணியஸ்தலங்களைக் குறித்தெழுந்த நூல்களைப் பற்றிச் சிறிது கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

தமிழ்வளத்தாலும் சமயவெற்றியாலும பெயர்சிறந்து விளங்கிய மதுரை மூதூர் ஒரு புண்ணியஸ்தலமாகக் கருதத்தக்க பெருமையை அடைந்து விட்டது. மாணிக்கவாசக சுவாமிகளின் சரிதம் இவ்வாறு கருதப்படுதற்குச் சிறந்த காரணமாயிருத்தல வேண்டும்.

“மதுரைப் பெருநன் மாநகர்
இருந்து
குதிரைச் சேவக னாகிய
கொள்கையும்
ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய
பரிசும்” (கீர்த்தித்திருவகவல்)

என்றும் பக்தி பரவசராயுள்ள தமிழ் மக்களுக்குப் பருகியாராத பரவமுதாக இருத்தல் வேண்டும். இறைவன் ஆட்சி மதுரைக்கரசனுகப் போற்றப்பட்டான் பாண்டிநாட்டே அவனது பழம்பதியாயிற்று. ‘பாண்டிநாடன்’, ‘தென் பாண்டி நாடான்’ என்ற பெயர் புனையப்பட்டான.

(வரும்.)

தோட்டங்களிலும் அரிசிக் கட்டுப்பாடு

அதற்கானஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன

அரிசிக் கட்டுப்பாடு கடைக்கு வந்தால் தோட்டங்களிலும் அரிசி விநியோகம் கட்டுப் பாட்டைக் கொண்டு வருவதற்காகச் சிலஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று உணவுக் கட்டுப்பாடு அதிகாரி திரு. ஆர். என். பெலியா வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை கூறுகிறது.

உணவுக் கட்டுப்பாட்டின் நிமித்தமாகத் தோட்டம் என்றால் 10 ஏகருக்கு அதிகமான ஏக்கர்கள் பயிரிடப்பட்டிருக்கிறதாயும் 40 பேர்களுக்குக் குறையாத பேர்கள் வழக்கமாக வசிக்கக் கூடியதாயும் அல்லது இந்தியத் தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடியதாயும் உள்ள ஒரு காணி என்று விபரிக்கப்பட்டிருக்கிறது.

பதினூறாவது விமானம்

பிருத்தானிய அரசுக்கு யுத்தவிமானங்கள் உதவுதற்கென்று கொழும்பிலே பிரசுரமாகும் ‘டைம்ஸ்’ பத்திரிகை சேர்த்துவந்த நிதிகொண்டு இதுவரை பதினைந்து விமானங்கள் உதவப் பட்டிருக்கின்றன. பன்னிரு விமானங்களை உடைய முதல் ஆகாயவிமானப் படைவகுப்புக்கென்று அதுசேகரித்து அனுப்பிய பணம் 15,10,125 ரூபா 22 சதம். இரண்டாவது ஆகாயவிமானப் படைவகுப்பைச்சேர்ந்த முதல் மூன்று விமானங்களுக்குமென்று சேர்த்தனுப்பியிருக்கும் 3,00,696 ரூபா 25 சதம. இப்போது நான்காம் விமானத்துக்கென்று பணஞ் சேகரிக்கப்படுகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை வரையில் அதற்கென்று பணஞ் சேகரிக்கப்படுகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை வரையிலே அதற்கெனச் சேர்த்துள்ளபணம் 19,467 ரூபா 16 சதம்.

திருச்சிரேடியோ நிகழ்ச்சி

(மீ 396)

செவ்வாய் ஆகஸ்ட் 12

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி சியாமளா 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 குரல் ராகங்கள்(இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 நக்ஷத்திரங்கள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எம். கே. கோவிந்தராஜன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 எம். கே. கோவிந்தராஜன் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி சியாமளா வீணை 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 யுத்தமுயற்சி 7-15 ஓம்கார் நாத்தாகூர் (இசைத்தட்டு) 7-30 தஞ்சாவூர் நாராயணஸ்வாமிப்பிள்ளை 9-00 செல்லிமா 9-15 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

புதன் ஆகஸ்ட் 13

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 டி. என். கல்யாணம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படப்பாட்டுகள்(இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 விந்வசங்கீதம் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. என். கல்யாணம் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்தியசங்கீதம் 5-15 திருவாலங்காடு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி டி. நாகம்மா 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 கான்ஸாவுரி 7-15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி டி. நாகம்மா 8-30 திருவாலங்காடு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

வியாழன் ஆகஸ்ட் 14

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 என். ராமநாதன் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 பாலர் விருப்பம் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 சினிமாக்களிலிருந்து(இசைத்தட்டு) 1-35 எஸ். டி. பட்டம்மாள் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 எஸ். ராமநாதன் பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 எஸ். டி. பட்டம்மாள் 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 நடைமுறை நிகழ்ச்சிகள் 7-15 உங்கள் ரேடியோ செட் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள்.

ரேடியோக் கச்சேரி

7-50 எம். கே. தியாகராஜ பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

காயகல்பமருந்துகளால் செய்யும் அனுகூல சிகிச்சை

மேகராசா

சலரோகம், நீரழிவு முதலிய வியாதிகளுக்கு ஓர் கைகண்ட மருந்து.

பத்தியமில்லை.

பரீட்சித்துப் பார்க்கத் தெரியும். ஒரு போத்தல் விலை ரூபா 4-00 (15 நாட்களுக்கு)

காயசித்தி, தத்துவக்குறைவு, சலரோகம், சிறுநீர்வாதம், குட்டம், தோற்புரை வியாதிகள், இரத்தக் கொதிப்பு, வாதம் முதலிய வியாதிகளுக்கு நேரில் கண்டு பேசிக் கொள்ளலாம்.

டக்டர் K. T. மங்களம்
R. I. M. P
(சென்னை)
M. S. V. S. மெம்பர்
கண்டிரோட், சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
Q 82 7-8—6.11.41

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரோப்ரைட்டர்"
Y 19. 4.3.41—3.3.41 K. A இரத்தினசிங்கம்

N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.
Telephone No. 30.

(Y 20— 1-4-41—31-3-42) தி

வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

புடவைகள்

இப்போது யாழ்ப்பாணத்தில்ஒவ்வொருவீட்டிலும்
பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

- வேட்டிகள்
- சால்வைகள்
- சேலைகள்
- சாரங்கள்
- கப்பாய்கள்
- துவாய்கள்
- லோங்குளோத்ஸ்
- மல்லுகள்
- பெட்ஷீட்டுகள்
- டிரில்லுகள்
- சூத்துணிகள்
- ரசூர்கள்
- ‘ஷேட்’துணிகள்
- ஷீட்டுகள்
- பஞ்சணைஉறைகள்
- மேசைத்துணிகள்
- பப்ளின்கள்
- யன்னல்துணிகள்

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சிலலறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127, 11-10-40—

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134 36700
100 ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசத்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்புமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்,
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Y 58 A. 21-11-40—20-11-41 (தி) கிளுப்பர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday August 11th 1941